Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 20 ரூபா • தீபம் 25 • 10.01.2016

**RAJANI TRAVEL**

இந்தியாவில் திருமண வைபவத்திற்கு ஏற்ற திருமண மண்டபம் மற்றும் தங்குமிடம் போன்றவற்றை பெற்றிடவும், இந்தியாவில் உள்ள பிரசித்திப் பெற்ற சுற்றுலா தலங்களையும் பார்வையிட சகல வசதிகளையும் செய்து தருகின்றார்கள்...

(0094) 774166369




தமிழர்சிங்களவர் பிரச்சனையை விட சிக்கலானது போக்குவரத்துதுறையினரின் பிரச்சனை. அரசபோக்குவரத்துதுறையும் தனியார் போக்குவரத்துறையும் அண்மைநாட்களாக நடுவீதியில் உரசுக்கொள்ளும் சம்பவங்களின் வரலாறு, பின்னணி என்பவற்றை அறிய...

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# CTB VS மினிபஸ்
# 'கல்லெறி' தகராறு

உள்ளே...



வெற்றிப்படிக்கட்டுக்கள்: கரிகணன் ராஜ்குமார் 6



'கலகல' அரசியல்வாதிகள் 7



வவுச்சர் வண்டவாளம் 9

# செயலில் சிறந்த சொல்லில்லை

கடந்த வருடத்தில் வடமாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் கணிசமானளவு நிதி செலவிடப்படாமல் இருந்த விவகாரம் அண்மைய வாரம்வரை சூடாக விவாதிக்கப்பட்டு வந்தது. இந்த வருடத்திற்கான வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோதும் அந்த விவகாரமே விவாதப்பொருளாக இருந்தது.

வடக்கு மாகாணசபை இதுவரை 230இற்கும் அதிகமான பிரேரணைகளை நிறைவேற்றி விட்டது. இதைவிட கடந்த வருடத்தில்த்தான் வடமாகணசபை அதிகமாக கதைத்த வருடம். எதற்கெடுத்தாலும் கருத்து சொல்லும் ஒருவராக முதல்வர் மாற, அவரது கருத்திற்கெல்லாம் பட்டும்படாமலும் பதில் சொல்லும் இன்னொரு அணி உருவாக மாகாணசபையே பெரும் அக்கப்போராக மாறியிருக்கிறது. அதாவது ஆளும்கட்சி எதிர்க்கட்சி மோதலிற்கு அப்பால், ஆளுங்கட்சிக்குள் உருவெடுத்துள்ள ‘உள்வீட்டு’ அரசியலும் பெரும் அடிபிடியாக அங்கு உருவெடுத்துள்ளது.

இப்படியான விவாதங்களினாலோ என்னவோ ஒவ்வொரு அமைச்சும் தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதியை சரியாக திட்டமிட்டு செலவிட முடியாமல் போனது. இது விமர்சனத்திற்குட்படவே வருட இறுதியில் பெருந்தொகைநிதியை அவசரஅவசரமாக செலவிட்டார்கள். இதில் நடக்கும் விபத்து என்னவென்றால், வருட நிறைவிலுள்ள சிலநாள் அவகாசத்தில் அவ்வளவு நிதியையும் அவசரஅவசரமாக செலவிடும்போது, அந்த நிதியை செலவிட்டு விமர்சனங்களிலிருந்து தப்பித்துவிடும் முயற்சிதான் நடக்குமே தவிர, நிதி திட்டமிட்டு செலவிடப்படாது.

வடக்கு மாகாணசபைதான் இலங்கையின் மிக இளைய மாகாணசபை. அதன் ஆட்சியாளர்கள் இப்பொழுதுதான் முதன்முதலாக ஆட்சிநிர்வாகமொன்றை நடத்துகிறார்கள். இதனால் அவர்களிற்கும் சிறிய அனுபவ காலஅவகாசம் தேவைப்பட்டிருக்கலாம். இந்த காரணங்களை அடிப்படையாக கொண்டு, நடப்பு நிதியாண்டில் இப்படியான சர்ச்சைகள் உருவாகாதென முதல்வர் கூறிய உறுதிமொழியை கேட்டு சமாதானப்பட்டு கொள்ளலாம். எனினும், குருவியாயினும் தலையில் உள்ள பனம்பழத்துடன் வடமாகாணசபை பறந்தே தீர வேண்டியது அவசியம். ஏனெனில் தமிழர்கள் தொடர்ந்தும் பேசிக் கொண்டேயிருக்க முடியாது. அரசியலில், பொருளாதாரத்தில், கல்வியில், தொழில்துறையில் என அனைத்து விடயங்களிலும் தமிழர்கள் விழுந்தே கிடக்கிறார்கள்.

வடக்கில் தொழில்துறை என்ற ஒன்றே கிடையாது. முதலீட்டாளர் களிற்கு கவர்ச்சியான இடமாக வடக்கு தன்னை காண்பிக்கவில்லை. சுற்றுலாத்துறை கிடையாது. வடக்கிற்கு வரும் ஒருவர் சுற்றுலா சென்று பார்க்க எத்தனை இடங்கள் உள்ளன? நல்லூர், நயினாதீவு போன்ற சம்பிரதாய இடங்களை தவிர்த்தால், பார்ப்பதற்கு வேறென்ன இடங்கள் உள்ளன? நன்னீர் மாசடைகிறது, உயிராபத்தை ஏற்படுத்தும் வன்முறைகள் நடக்கின்றன என்பதை தவிர்ந்த வேறெந்த அடையாளத்தை வடக்கு காண்பித்துள்ளது?

முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் நடக்க வேண்டும். சிறு முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் செயற்திட்டங்கள் வேண்டும். வடக்கில் உள்ள பறவைகள் சரணாலயங்கள், சுற்றுலாமையங்களை புனரமைக்க, உருவாக்க வேண்டும். காடுவளர்க்க வேண்டும் இப்படி செய்வதற்கு ஏராளம் வேலைகள் உள்ளன. நன்றாக அரசியல் பேசுவதைவிட வேறெதனையும் அரசியல் வதிகளோ, அதிகாரிகளோ செய்வதாக தெரியவில்லை. குடாநாட்டில் உருவாகிவரும் பெரும் குப்பைமேடுகள் பற்றியே யாரும் கண்டு கொண்டதாக தெரியவில்லை. கல்லுண்டாய் வெளியில், சோனப்பு வெளியில் குப்பைமேடுகள் உருவாவதும் பின்னர் அவற்றிற்கு தீ வைப்பதும் அடிக்கடி நடக்கும் நம்பவங்கள். மக்காத திண்மகழிவுகள் அந்த பகுதி நீரையும், நிலத்தையும் விரைவில் மாசடைய செய்துவிடும். சற்றே அகன்ற தண்ணீர் தொட்டிபோன்றது யாழ் குடாவின் நிலத்தடி நீராதாரம். அதில் ஒருதுளி விசம் கலந்தால் என்ன நடக்குமென்பதற்கு, கழிவு எண்ணெய் விவகாரம் நல்ல உதாரணம். எல்லோருமே போத்தல் தண்ணீர்தான் அருந்த வேண்டும்.

கழிவுப்பொருட்களை மறுசுழற்சி செய்தல் அல்லது பயனுள்ள ஏதாவதொரு வழியில் திருப்புதல் போன்ற முயற்சிகளை அவசரமாக ஆரம்பிக்க வேண்டும். ஒரேயிடத்தில் கழிவுகளை கொட்டி, அந்த இடத்தை குப்பைமேடாக்குவதன் விளைவுகள் விபரீதமாகும். கழிவுகள் தொடர்பான அவசர செயன்முறையொன்றை வடமாகாணசபை கண்டுபிடிக்க வேண்டும்.

இப்படி செய்வதற்கு எண்ணற்ற பணிகள் இருக்க, வடமாகாணசபை அதிகமும் பேசிக் கொண்டிருக்கிறது. தமிழ்தேசிய அரசியல் பாரம்பரியப்படி எதையும் செய்யத் தேவையில்லை, எப்பொழுதும் பேசிக் கொண்டிருந்தால் போதுமென்ற சம்பிரதாயத்தின் ஆகப்பிந்திய பிரதிநிதிகள்தான் வடமாகாணசபையினர் எனில்,

மறுசுழற்சியே செய்ய முடியாத வரலாற்றின் குப்பைக்கூடைக்குள் வரலாறு அவர்களையும் எறிந்து விடும்.

**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633

சந்தா : subs@deepam.lk
ஆசிரியர் பீடம் : editor@deepam.lk
விளம்பரம் : sales@deepam.lk
வேலைவாய்ப்பு : hr@deepam.lk
செய்திகளுக்கு : news@deepamnews.com

# சொன்னார்கள்



### எம்.ஏ.சுமந்திரன்
**பாராளுமன்ற உறுப்பினர்**

ஆறுமாதகாலத்தில் சாதகமான அபிவிருத்தியுடன் இடம்பெயர்ந்தவர்களிற்கு குடியிருப்புக்கள் கொடுப்பதென்ற அரசாங்கத்தின் முடிவை வரவேற்கிறோம். ஆனால் இராணுவத்தின் பிடியிலுள்ள தனியார் காணிகள் அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டுமென்ற எமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை



### மைத்திரிபால சிறிசேன
**ஜனாதிபதி**

துன்பம் நேர்ந்தபோதும் கைவிடாமல் துணை நின்ற பாகிஸ்தான் இலங்கையின் உண்மையான நண்பன். இந்த உன்னத நட்பை மேலும் வலுப்படுத்த தொடர்ந்தும் உழைப்போம்.




### அகிலவிராஜ் காரியவசம்
**கல்வியமைச்சர்**

ஒவ்வொரு பாடசாலைக்கும் 50 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவை பராமரிப்பின்றி மூலையில் வீசப்பட்டுள்ளதை கண்டுள்ளேன். அதனால் இனி பாடசாலைகளிற்கு வாடகை அடிப்படையிலேயே கணினி வழங்கலாமென உத்தேசித்துள்ளோம்.



### இரா.சம்பந்தன்
**எதிர்கட்சி தலைவர்**

தமிழ்மக்கள் பேரவையில் உள்ள தனிநபர்களால் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் கடந்தகாலங்களில் மக்களால் நிராகரிக்கப்பட்டவை. துரதிஷ்டவசமாக மக்களால் நிராகரிக்கப்பட்ட கொள்கைகளுடன் விக்னேஸ்வரன் தன்னை இணைத்துள்ளார். இதனை கண்காணித்து வருகிறோம்.



### கலகொட அத்தே ஞானசார தேரர்
**பொதுபலசேன**

அரசியலமைப்பு திருத்த ஆலோசனைக்குழுவில் புலிகளின் ஆதரவு உறுப்பினர்களும் உள்ளடங்கியுள்ளனர். அதனால் புதிய அரசியலமைப் தனிஈழத்தை உருவாக்கும்

# க்ளிக் பக்கம்



படப்பிடிப்பாளர்: மனோகரன் சசிகரன்
இடம்: நிலாவெளி

திருகோணமலை நிலாவெளியில் வீதியின் இரு மருங்கிலும் வரிசை கட்டி நிற்கும் வேம்பு மரங்கள்.

**என்னைப் பற்றி:** நான் ஒரு புகைப்படப்பிடிப்பாளன் 20 வருடங்களாக புகைப்படம் எடுத்து வருகிறேன்.



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் deepamdesk@gmail.com

# உயர்தர வணிகப்பிரிவில் தேசியமட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவனிற்கு...

**சிங்களத்தில் : ஷான் கசீர விக்ரமசிங்க**
**தமிழில் : ஸப்வான் பஷீர்**



***அன்புள்ள ஆகில் முஹம்மட்....***

உங்களது வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள். எதிர்காலத்தில் நாட்டுக்குப் பயன்தரக்கூடிய பிரஜையாகவரவேண்டும்என்று பிரார்த்தித்தவனாக கீழே உள்ள படத்தையும் கொஞ்சம் பார்க்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

இங்கே இருப்பது ஒரு சிறிய காரின் சாரதியோ அல்லது வாகனம் திருத்துபவர் என்றோ தவறாக நினைத்துவிடாதீர்கள்.

இங்கே இருப்பது உதய ப்ரபாத் கமன்பில எனும் இளம் பாராளுமன்ற உறுப்பினர் .

சரியாக இற்றைக்கு 27 வருடங்களுக்கு முன்னர் 1988 இல் உங்களைப்போலவே உயர்தர வர்த்தகப் பிரிவில் முதலிடம் பெற்ற புத்திசாலி மாணவர்.

கையில் கொத்துக் கணக்கில் நூல் கட்டியிருந்தாலும் அவுஸ்திரேலியாவின் மொனேஷ் பல்கலைக்கழகத்தின் கணணித்துறை பட்டாதாரி இவர்.

இப்போது டிசைன் டிசைனாக ஆடை அணிந்தாலும், வெட்கமில்லாமல் அரசியல் செய்தாலும், கொழும்பின் முன்னணிப் பாடசாலை ஒன்றின் பிரதி மாணவத் தலைவராக கடமையாற்றியவர்.

சோம தேரரின் ஆசிர்வாதத்தோடு அரசியலுக்கு வந்து பாராளுமன்றம் வரை சென்ற சால்வையின் அரசியல் கைதிகள் கூட்டத்தில முக்கிய புள்ளி இவர்.

தனது அரசியல் பிரச்சாரத்துக்கு போஸ்டர் அடிப்பதற்கென்று 100 ரூபாய் வீதம் மக்களிடம் பணம் சேர்த்தவர்.

கொள்கைக்காக மஹிந்தவை விட்டுப் பிரிந்து செல்வதாகச் சொல்லிச் சென்று அடுத்த நாளே வெட்கமே இல்லாமல் மஹிந்தவின் மடியில் போய் உட்கார்ந்து கொண்டதும் தேசிய மட்டத்தில் வணிகப்பிரிவில் முதலிடம் பெற்ற இம் மாணவர்தான்.

அன்புக்குறிய ஆகில் முஹம்மட்.....

உயர்தரப் பரீட்சையில் தேசிய ரீதியில் முதலிடம் பெறுவதென்பது புத்திசாலியாக உருவாவதற்கான காரணமில்லை என்பதை கீழே உள்ள புகைப் படத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

தயவு செய்து தேசிய ரீதியில் உயர்தர வணிகப்பிரிவில் முதலிடம் பெற்ற இன்னுமொரு கம்மன்பிலயாக நீங்கள் உருவாகிவிடாதீர்கள்.

இறைவன் உங்களுக்கு துணைபுரிவானாக.

**(நன்றி:இணையம்)**




தமிழகத்தின் ஈரோட்டில் இந்த காட்சி பதிவாகியது. குரங்கொன்று ஒருமாதமான நாய்க்குட்டியை எடுத்து வளர்த்து வந்தது. தன்னுடனேயே எல்லா இடமும் கொண்டு திரிந்துள்ளது. குரங்கின் பிடியிலிருந்து நாய்க்குட்டியை மீட்க வேண்டுமென பரவலாக குரல்கள் எழுந்ததை அடுத்து, பெரும் பிரயத்தனப்பட்டு நாய்க்குட்டியை அதிகாரிகள் மீட்டனர்.

**Thanija Amir**
Great

**Venistan Alex**
This a beuty

**Vasanth Vasanth Kumar**
like this pa



**www.facebook.com/mynthan**
விடிய எழும்பிப் பார்க்கும்போது,அழகாக பெயிண்ட் அடித்திருக்கும் உங்கள் வீட்டுச்சுவரின் மீது உங்களுக்கு சற்றும் ஒவ்வாத வாசகத்தை யாரேனும் இரவோடிரவாக பெயிண்ட்டால் ஸ்ப்ரே செய்துவிட்டுப் போயிருந்தால் எப்படியிருக்கும்? ஆட்டோக்கள் பஸ்களில் ஸ்டிக்கர்கள் ஒட்டுவதென்று ஆரம்பித்த 'சிங்க'லே' கோஷக்காரரின் வேலைகள் இப்படியாகத்தான் மெல்லமெல்ல விஸ்வரூபமெடுக்க ஆரம்பித்திருக்கின்றன.இந்த நாடு சிங்களவர்களுக்கே உரித்துடையது..இந்த நாட்டிலிருக்கும் அனைவரும் சிங்க'இரத்தம்' பாய்பவர்கள்,வேறு யாருக்கும் இந்த நாட்டில் இடமில்லை என்கின்ற அதே அடிப்படைவாத தீவிரவாதம் மீண்டுமொருமுறை தலைதூக்க ஆரம்பித்திருப்பதன் அபாயசமிக்ஞை தான்,முஸ்லீம் வீடுகளின் சுவர்களை தேடித்தேடி கிறுக்கப்பட்ட இந்த 'சிங்க லே' கோஷம். இந்த இனவாதம் அனைத்து சிங்களவர்களிடமும் இல்லாவிட்டாலும்கூட ஏறத்தாழ அரைவாசிக்கும் மேற்பட்ட சிங்களவர்களிடம் இது ஊறியிருக்கும் ஒன்று. அதனை கிளறாதவரையில் அவர்கள் சாதாரணர்கள். இனவாதத்தை கிளறிவிடுவதன் மூலம் தான் ஒரு ஆட்சியின் இஸ்திரத்தன்மையை சிதைத்து மக்களை வேறு திசை நோக்கி கொண்டுசெல்லலாம் என்பதை நன்கறிந்த சில கேவலமான அரசியல்வாதிகளினதும் இனவாத கட்சிகள்,கூட்டங்களினதும் இந்த நாசகார வேலைகளை இனம்கண்டு நசுக்கும்பொறுப்பு அரசின்வசம்.மறுபக்கம்,சோர்ந்துபோயிருக்கும் அரசின் நடவடிக்கைகளை மக்கள் விமர்சிக்க ஆரம்பிக்கும் முன்பாக மக்களை வேறு திசை நோக்கி திருப்பும் வேலைகளாகவும் இதனை சந்தேகிக்கலாம்.



**www.facebook.com/belladalima**
உடல் குண்டாக இருப்பவர்கள் தினம் சாப்பிடும் உணவில் பச்சை மிளகாய் சேர்த்துக்கொண்டால் உடல் எடை குறையுமாம்.
பின் குறிப்பு : 1 கிலோ பச்சை மிளகாய் 1000 ரூபாய்!



**www.facebook.com/panbazhagi**
ஒருவரைப் பிடிக்காமல் போவதற்கு அவர் மட்டுமே காரணமல்ல நாமாகவும் இருக்கலாம்.



**www.facebook.com/rimazahamed23**
நல்லவேள நியூசிலாந்து காரங்க நம்ம ப்ரண்ட் லிஸ்ட்ல இல்ல. இந்தியாக்காரங்க இருக்காங்க World Cup க்கு முந்தி அவங்கள Unfriend பண்ணிட்டு ஆஜன்ட்டினா, ப்ரேசில், ப்ரான்ஸ் நாட்டுக்காரங்கள Add பண்ணணும்!!!

## எண்ணிக்கை

**10,000,000** இலங்கையில் வருடாந்தம் பாவிக்கப்படும் ஆணுறை

**2,000** தனியார் வைத்தியசாலைகளில் விசேட வைத்திய நிபுணரின் உச்சபட்ச கட்டணம்

**1,000** கடந்த வருடம் நாடு முழுவதும் மோட்டார்சைக்கிளில் சென்று விபத்தில் இறந்தவர்கள்

**225** கடந்த வருடம் நாடு முழுவதும் இனம்காணப்பட்ட எச்.ஐ.வி தொற்றுகுள்ளானவர்கள்

# புதிய யேசு கிறிஸ்து!

இதுவரை பார்த்த இயேசுவின் தோற்றத்திற்கு முற்றிலும் மாறுபட்ட தோற்றத்தை விஞ்ஞான முறையில் வரைந்து, இயேசு இப்படி தான் இருந்தார் என நிரூபிக்கும் முயற்சியில் இங்கிலாந்து மருத்துவத் துறை ஓவியர் ஒருவர் இறங்கி உள்ளார்.

மான்செஸ்டர் பல்கலையில் பணியாற்றி ஓய்வு பெற்ற ரிச்சர்ட் நீவ் என்ற அந்த ஓவியர், இயேசு கிறிஸ்து வாழ்ந்தாகக் கூறப்படும் ஜெருசலேம் நகரில் பல மாதங்களாக முகாமிட்டு, அந்த பகுதியில் இருந்து கிடைக்கப்பெற்ற மண்டை ஓடுகள், பல்வேறு தடயவியல் பொருட்கள் போன்றவற்றை, பல்வேறு ஆராய்ச்சிகளுக்கு உட்படுத்தி 3 டி முறையில் ஓவியம் ஒன்றை வரைந்துள்ளார்.

ஏற்கனவே நாம் பார்த்து வந்த இயேசுவின் ஓவியத்தில், அவருக்கு இருக்கும் நீண்ட தலை முடி, ஒடுங்கிய கன்னங்கள், சிவந்த நிறம் என எதுவும், ரிச்சர்ட் நீவ் வரைந்துள்ள ஓவியத்தில் இல்லை. அவரின் ஓவியத்தில் இயேசு சாதாரண மனிதர் போலவே காட்சியளிக்கிறார்.

இந்த புகைப்படம் குறித்து, கலிபோர்னியா பல்கலைக்கழக மானுடவியல் துறை பேராசிரியர் அலிசன் கோல்லாவே கூறுகையில், "இந்த முறையில் உருவாக்கப்படும் ஓவியங்கள், ஓரளவிற்கு உண்மையாகவே இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.



இலங்கை இனப்பிரச்சனையை தீர்த்து வைக்கலாம். மகிந்த, சந்திரிகா பிரச்சனையை தீர்த்து வைக்கலாம், ஆனால் இந்த சீ.ரி.பி பிறைவேற் பஸ்காரர்களின் பிரச்சனையை தீர்த்து வைக்கவே முடியாது போலத்தான் உள்ளது. நூறு ஜென்மப்பகை போல இருதரப்பும் அடித்துக் கொள்வதை பார்க்க அப்படித்தான் தோன்றுகிறது.

சாதாரணமாக வீதியில் நின்று கொண்டிருக்கிறார்கள். திடீர் திடீரென வீதியில் பேரூந்துகளை ஏறுக்குமாறாக செருக்கிவிட்டு, ஆளையாள் அடித்து கொள்கிறார்கள். நடுவீதியில் கண்மண் தெரியாமல் வாகனங்கள் பறப்பதை பார்க்கும்போது யமகிங்கரரே வாகனத்திலிருந்து அக்சிலேற்றரை மிதிப்பதை போல தோன்றுகிறதென்கிறார்கள் மக்கள். பேரூந்துகளின் மீது கல்வீச்சு தாக்குதல்கள் நடத்துகிறார்கள். மொத்தத்தில் மக்களின் பயணமென்பதே கரணம் தப்பினால் மரணமென பாதுகாப்பற்ற தன்மையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

இந்த 'அல்லோலகல்லோலம்' வடக்கின் பெரும்பாலான பகுதிகளில் உள்ளது. கிழக்கின் சில பகுதிகளிலும் உள்ளபோதும், வடக்குத்தான் இந்த மோதலின் தலைநகரம். வடக்கின் அத்தனை பேரூந்து தடங்களிலும் இருதரப்பின் 'லடாய்' நடந்தாலும், யாழ்ப்பாணத்தில்த்தான் உச்சபட்ச மோதல் நடக்கிறது. அதிலும் குறிப்பாக அண்மைய நாட்களில்த்தான் மோதல் உச்சம்பெற்றிருக்கிறது.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தான பேரூந்துகளும், தனியாருக்கு சொந்தமான சிற்றூந்துகளும் ஏட்டிக்குப் போட்டியாக பறப்பது இன்று நேற்று ஆரம்பித்த விடயமல்ல. கோழி முதலில் வந்ததா முட்டை முதலில் வந்தா என கேட்பதைப் போன்ற விசயம்தான் இது. அடிமுடி காணமுடியாத பிரச்சனை.

அதிலும் யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் இன்னும் நிலைமை வில்லங்கமாகிறது. குறுகிய தூர பயணவழிகளை பங்கிடுவதில் இருதரப்பும் அடித்துப்பிடித்துக் கொள்கிறது.

போட்டிபோட்டுக் கொண்டு கண்மண் தெரியாமல் பறப்பது, நடுவீதிகளில் பேரூந்துகளை நிறுத்தி விட்டு மல்லுக்கட்டுவது என தமிழ் சினிமாவின் வில்லன்களை போல பயமுறுத்துகிறார்கள் போக்குவரத்துறையினர்.

கடந்த சிலநாட்களிற்குள் யாழ்ப்பாணம் பருத்தித்துறை 750 வழித்தடத்தில் இரண்டு மோதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இருதரப்பும் மோதிக்கொள்வதால் பாதிக்கப்பட போவதென்னவோ பயணிகள்தான். நடுவீதியில் இருதரப்பும் மல்லுக்கட்டி, பொலிசார் இருவரையும் விசாரணைக்கு கொண்டு செல்ல, பயணிகள் நடுவழியில் நின்று அந்தரிக்க வேண்டியிருக்கிறது.

அண்மையில் அரசபோக்குவரத்துறை புதிய பேரூந்துகளை சேவையில் ஈடுபடுத்தியது தனியார் துறையினரை கொதிப்படைய வைத்துள்ளது. தமது தொழில் பாதிக்கப்படுகிறதென்பது அவர்கள் வாதம். தனியார் துறையினர் பணம் சம்பாதிக்க வேண்டுமென்பதற்காக அரச போக்குவரத்துறை சிறப்பான சேவையை வழங்காமலிருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்களா? இது அரச துறையினரின் கேள்வி. இந்த சிக்கலிற்கு விடை கண்டு பிடிப்பதிலேயே பிரச்சனையின் பின்னணி தங்கியுள்ளது.

இந்தசிக்கல்கள் எதில்போய் முடிந்துள்ளதெனில், அரச பேரூந்துகளின் மீது நடத்தப்படும் கல்வீச்சு தாக்குதல்களில். கடந்த 2015ம் ஆண்டில் மாத்திரம் யாழ்சாலைக்கு சொந்தமான அரசபேரூந்துகள் மீது 50இற்கும் அதிகமான தடவைகள் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. இந்தப்பட்டியலில் தனியார் பேரூந்துகள் எதுவும் சிக்கவில்லை. அரச பேரூந்துகள் மட்டும்தான் இந்த சிக்கலை சந்திக்கின்றன. இந்த தாக்குதல்களின் பின்னணி யார் என்ற கேள்வி, ஒன்றும் அத்தனை பெரிய மர்மமல்ல. எல்லோருக்கும் தெரிந்ததுதான். எனினும், அரசபேரூந்து சாரதிகள் அப்படி மோசமாக நடக்கவில்லையென்பதே பாராட்டப்பட வேண்டிய விடயம்தான்.

இருதரப்பிற்குமிடையிலான முறுகல் உச்சமடைய அதிகாரிகளின் அசன்டையீனமும் ஒரு காரணமென கூறப்படுகிறது. கிளிநொச்சி, யாழில் தனியார் பேரூந்துகளிற்கான தரிப்பிடம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. வீதியோரங்களிலேயே அவை தரிக்க வைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் அரசபேரூந்துகளின் எதிராக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எதிரெதிரே நிற்கும்பொழுது தான் போட்டித்தன்மை அதிகரிக்கிறதென்பதில் உண்மை இல்லாமலில்லை.

இப்பொழுது தூரசேவைகளை ஒருங்கிணைந்த நேரஅட்டவணையில் நடத்தலாமென தீர்மானிக்கப்பட்டுள்ளதெனவும், 60:40 என்ற அடிப்படையில் தனியார்துறையும் அரசதுறையும் பங்கிடுவதெனவும் முடிவாகியுள்ளது. இதில் உள்ள சிக்கல் என்னவெனில், இந்த நடைமுறையால் யாழிலிருந்து வவுனியா செல்லும் பேரூந்துகளில் மூன்றை இடைநிறுத்த வேண்டிய நிலைக்கு அரசபோக்குவரத்துறை தள்ளப்பட்டுள்ளது. தூரசேவையிலிருந்து இடைநிறுத்தப்படும் பேரூந்துகளை உள்ளூர்சேவைக்குத்தான் பயன்படுத்த வேண்டும். மேலும் பேரூந்து சேவைகள் அதிகரித்தால், 'கல்லெறிபவர்கள்' சும்மாயிருப்பார்களா?

அண்மையில் போக்குவரத்துறை அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வா வவுனியா வந்திருந்தார். கல்லெறி பிரச்சனை பற்றி அறிந்ததும், 'இவர்களிற்கு புலிகள்தான் சரி' என்ற சாரப்பட கருத்து சொல்லியிருந்தார்.


அரசபேரூந்துகளின் மீதான கல்லெறியை சாதாரண விடயமாக பொலிசார் விட்டுவிட முடியாது. அது அரசநிர்வாகத்தை முடக்கும் முயற்சி. கடந்த வருடத்தில் மட்டும் ஐம்பதிற்கும் அதிகமான தாக்குதல்கள். ஒரு குற்றவாளியும் கைதாகவில்லை. இப்படியான வன்செயல்களில் ஈடுபட்டுவிட்டு, சட்டத்திலிருந்து தப்பிவாழலாமென்ற அபாயகரமான முன்னுதாரணத்தை யாரும் வழங்கிவிடக்கூடாது. கல்லெறிந்தபோது கண்டுகொள்ளவில்லைத்தானே என இன்னும் அதிக வன்முறையை யாராவது நாடலாம். தீவிரவாத மனநிலையுடைய ஒருவர் வில்லங்கமான காரியத்தில் ஈடுபடும் துணிவை வழங்கிவிடலாம். எனவே, எதுவானாலும் பேசியே தீர்க்கப்பட வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை சம்பந்தபட்ட தரப்பினர் உணரும் விதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

- தீபம் குழு


கல்லெறியிலிருந்து தப்பிக்க தடுப்புவலை அமைக்கப்பட்ட பேரூந்து



கல்லெறிக்குள்ளான பேரூந்து



கறுப்புச்சந்தையில் பெறப்பட்ட தனியார் பேரூந்து வழித்தடமென வெளியிடப்பட்டது

அரசபோக்குவரத்துதுறையினர் அதிகளவான பேரூந்துகளை சேவையில் ஈடுபடுத்துகின்றனர், அதனால் நாங்கள் பாதிக்கப்படுகிறோம் என்பதுதான் தனியார்துறையினரின் குற்றச்சாட்டு. ஆனால், மக்களின் அடிப்படை தேவைகளில் ஒன்றாக உருவெடுத்துள்ள போக்குவரத்தை தனியார்துறையினரின் எதிர்பார்ப்பிற்கு தக்கதாக வைத்திருக்க முடியாது. போக்குவரத்துறை நவீனப்படுத்தப்படுவதையோ, இலகுபடுத்தப்படுவதையோ தனியார்துறையினர் இலாபத்தை கணக்கிட்டுசெய்யமுடியாது. மக்களின் தேவைகள், வேலைவாய்ப்பு பெருக்கத்தையும், பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட நாட்டின் வளர்ச்சியை அடிப்படையாக வைத்தும் போக்குவரத்துறை விஸ்தரிக்கப்படுவதுடன், நவீனப்படுத்தப்பட வேண்டும். இந்த வளர்ச்சிக்கு தனியார்துறையினர் ஈடுகொடுத்து தங்களை மாற்றிக் கொள்ள வேண்டுமே தவிர, தனியார்துறையினரின் நலன் என்ற ஒன்று, போக்குவரத்துதுறையின் வளர்ச்சி, விஸ்தரிப்பிற்கு தடையாக இருக்கக்கூடாது.

**வ**டமாகாணம் தவிர்ந்த மற்ற எல்லா மாகாணங்களிலும் மாகாண சபையினூடாகவே பேரூந்துகளிற்கான வழித்தட அனுமதி வழங்கப்படுகிறது. எனினும், வடமாகாணசபை உருவாகுவதன் முன்னர் யாழ்ப்பாண மாவட்ட செயலகம் வழித்தட அனுமதியை வழங்கியது. இன்று வரை அந்த நடைமுறையே பின்பற்றப்படுகிறது. மாகாணசபை உருவாகி இவ்வளவு காலமாகியும் ஏன் இந்த விவகாரத்தில் அக்கறை செலுத்தவில்லை?

**யா**ழ் மாவட்ட செயலகத்தினால் வழங்கப்படும் வழித்தட அனுமதி முறையற்றது என்பது அரசபோக்குவரத்துறையின் குற்றச்சாட்டு. 3000 ரூபாவிற்கு வழங்கப்படும் அந்த வழித்தட அனுமதியை 'கறுப்புச்சந்தை'யிலும் எடுக்கலாமென குற்றம்சாட்டியதுடன், அப்படி எடுக்கப்பட்ட அனுமதி பத்திரமென ஒன்றை இலங்கை போக்குவரத்துசபையின் வடபிராந்திய முகாமையாளர் ஊடகவியலாளர்களிடம் காண்பித்துள்ளார்.

சிறு விளம்பரங்கள் ~~2000/=~~ 1000/=

வாகன சேவை
இலங்கையிலுள்ள பிரசித்திப் பெற்ற சுற்றுலா தளங்களைப் பார்வையிட சகல வசதிகளுடன் கூடிய வாகனங்களை ஏற்படுத்தி தருகின்றார்கள்.
தொடர்புகளுக்கு 0774166369

பார்சல் சேவை
வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு நீங்கள் விரும்பும் பொருட்களை நாங்கள் நேரடியாக உங்கள் இல்லத்திற்கு வருகை தந்து குறைந்த செலவில் அனுப்பி வைப்போம்...
தொடர்புகளுக்கு 0773828594

தேவை
யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பெண் ஒருவருக்கு அறை ஒன்று தேவைப்படுகிறது.
தொடர்புகளுக்கு 0774166369

விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள பேப்பர் கட்டர் (Paper Cutter) ஒன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - 0770707736

உங்களுடைய சிறு விளம்பரங்களை குறைந்த தொகையில் தீபத்தில் பிரசுரம் செய்ய
தொடர்புகளுக்கு :- 0774166369



## மக்கள் குரல்

மட்டக்களப்பின் மண்முனை தென்மேற்கு பிரதேசசெயல பிரிவிற்குட்பட்ட தாந்தாமலை கிராமத்தின் குளத்திற்கு அருகில் உள்ள பாலவீதியின் நிலையிது. வீதியின் தடுப்புச்சுவருக்கருகில் பெரிய குழி தோன்றியுள்ளது. முறையான குனரமைப்பு பணிகள் நடக்காததால் கிறவல் கீழிறங்கி குழி தோன்றியுள்ளது. இது வீதிக்கும், தடுப்பு சுவருக்கும் ஆபத்தை ஏற்படுத்தலாமென மக்கள் அச்சமடைகிறார்கள்.

நீரோடும் பாதைக்கும் வீதிக்கும் இடையில் கட்டப்பட்ட இந்த சுவருடன்தான் புனரமைப்பு பணி பற்றிய விபரங்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டும் உள்ளது.

நிறுவனமொன்றின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட இந்த பாலம், வீதியென்பன கடந்த 2015.12.07ம் திகதியன்றுதான் திறந்து வைக்கப்பட்டது. திறந்து வைக்கப்பட்ட ஒருமாதத்திற்குள்ளேயே வீதியில் பெரியகுழி தோன்றியுள்ளது பயணம் செய்யும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.












# 'பயந்ததால் வென்றேன்'

'எனது வெற்றியின் பின்னாலிருந்தது பயம்தான்' என சிரிக்கிறார்' கரிகணன் அச்சக உரிமையாளர் ராஜ்குமார். அச்சக தொழில் பற்றிய அடிநுனியெதுவும்தெரியாமல், தந்தையார் கொடுத்த நான் கரை இலட்சம் ரூபா பணத்தை வைத்துக் கொண்டு வடக்கின் தனித்துவமான அச்சகமொன்றை நிறுவியவரின் வெற்றிச்சூத்திரமே பயம். தோற்றுவிடுவேனோ என்ற பயம். தந்தையார் தந்த பணத்தை வைத்து முன்னுக்கு வந்துவிட வேண்டுமென்ற வெறி. இதுதான் வடக்கின் அச்சுத்துறையின் முகவரியாக கரிகணன் மாறியதன் பின்னாலுள்ள கதை. அவரது வெற்றியின் சூத்திரம், ஆரம்பகால போராட்டம், நிறுவனத்தின் தற்போதைய நிலை உள்ளிட்ட பல விடயங்களையும் அவருடன் பேசினோம்.




'நான் தான் குடும்பத்தின் கடைசிப்பிள்ளை. சிறு வயதில் இருந்து எனக்கு தனியாக நிறுவனம் ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணமும்இருந்ததில்லை.எமது குடும்பத்தில் எவரும் வியாபாரத்தில் இருக்கவில்லை. அப்பா மக்கள் வங்கியில் பணிபுரிந்தார். நான்தான் குடும்பத்தில் முதலாவதாக சொந்தத் தொழில் தொடங்கியவன். சொந்த நிறுவனத்திற்கு உரிமையாளராகுவேன் என்ற எண்ணம் எனக்கு இருக்கவில்லை.

மாணவக்காலத்தில் வைத்தியராக வருவேன் என்ற எண்ணத்திலே இருந்தேன். உயர்தரத்தில் படித்தது விஞ்ஞானப் பிரிவில். எனக்கு விளையாட்டுத்துறையிலே ஆர்வம் அதிகமாக இருந்ததால் வைத்தியராக முடியவில்லை. பின்னர் இரண்டு பட்டப்படிப்புக்களை மேற்கொண்டேன். அதையும் நிறைவு செய்யவில்லை. பின்னர் மாதம் மூவாயிரம் ரூபாவுக்கு வேலை பார்தேன். அதுவும் ஒரு வருடம்தான் வேலை பார்த்தேன்.

அப்பொழுதுதான் சுயமாக தொழில் தொடங்கு என்று அப்பா நான்கரை லட்சத்தைத் தந்தார். அதை மூலதனமாகக் கொண்டு 2000 ஆம் ஆண்டு அச்சகம் ஒன்றை ஆரம்பித்தேன். ஒரு வீட்டை வாடைக்கு எடுத்து முதல் முதலாக அச்சகத்தை தொடங்கினேன். அப்போது முழுமையான எந்தவொரு இயந்திரமும் இல்லை. எனது அச்சகத்தில் கட்டர் இல்லை. பிள்ளையார் அச்சகத்திற்கு ஸ்கூட்டரிலேயே கொண்டு சென்று செய்துவருவேன். பெரிய கஸ்டங்களுக்கு மத்தியிலே ஓடர்களை முடித்துக் கொடுத்தேன்.

அச்சகம் ஆரம்பித்தபோது அச்சகம் பற்றிய எந்த அனுபவமும் எனக்கு இல்லை. அதனை எவ்வாறு நடத்துவது என்றும் எனக்குத் தெரியாது. நீச்சல் தெரியமல் நடுக்கடலில் நின்றது போலதான் நின்றேன். ஆனால் எனது அகராதியில் முடியாது என்ற சொல் இல்லை. எதனையும் முயற்சி செய்து பார்ப்பேன். அந்த முயற்சிதான் என்னை இன்று இந்த அளவிற்கு வளர்வதற்கு காரணமாக இருந்தது. ஆனால் பாரதி அச்சகத்தின் உரிமையாளர் சங்கர் சேர் எனக்கு அச்சகம் பற்றிய பல விடயங்களை சொல்லித்தந்தார். அவருடைய வழிகாட்டல் எனக்கு பெரும் உதவியாக இருந்தது.

ஆரம்பத்தில் இரண்டு பேருடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த சிறிய அச்சகம் இன்று நூற்றி ஐம்பது பேருடன் பெரிய நிறுவனமாக வளர்ந்துள்ளது. இந்தநிலைக்கு வளர்வதற்கு பல சவால்களை எதிர்கொண்டேன். இன்று நான்கு முறை ஜனாதிபதி விருது உட்பட பல விருதுகளை பெற்ற அச்சகமாக கரிகணன் அச்சகம் விளங்குகின்றது.

இந்த வளர்சிக்குக் காரணம் எனது பயம்தான். எங்கே தோற்றுவிடுவேனோ என்ற பயம். கல்வி கற்கும் காலங்களில் இல்லாத பயம் சொந்தத் தொழில் தொடங்கியவுடனே வந்துவிட்டது. அதன் விளைவாக வந்த முயற்சியினாலேயே இத்தனை வெற்றியினைக் காணக்கூடியதாக இருந்தது.

நான் இத்தனை வளர்ச்சி கண்டுள்ளதற்கு பலரின் ஒத்துழைப்பும் எனக்கு இருந்தது. தொழிலின் முதலாவது படியைத் தொடங்கி வைத்த எனது நண்பன் அருள்ராஜை மறக்கமுடியாது.

ஆனாலும் இன்றும் நான் திருப்தி அடையவில்லை. அப்துல்கலாம் சொன்னது போல் கடனும் இருக்க வேண்டும். திருப்தி இன்மையும் இருக்கவேண்டும். கடன் இருந்தால்த்தான் நித்திரை வராது. திருப்தியின்மையிருந்தால்த்தான் முயற்சியிருக்கும். நான் அவர் சொன்ன வழியிலே நடக்கின்றேன். நான் இன்னும் திருப்தியடையவில்லை. இன்னும் பல பரிணாமங்களை எடுப்பேன். முதற்கட்டமாக சாதாரணபரீட்சை எடுத்த மாணவர்களுக்கு ஆறுமாத காலம் கொண்ட அச்சகம் பற்றிய பயிற்சிநெறி கொண்ட கற்கைநெறி ஒன்றை மேற்கொள்ளப் போகின்றோம். அதில் 32 மாணவர்களை உள்வாங்கக்கூடியதாக இருக்கும். அத்தோடு அவர்களை வேறு அச்சகங்களுக்கும் உள்ளகப்பயிற்சிக்கும் அனுப்பப்படுவர். அவர்களுக்கு இந்தத்துறை படித்துப் போனால் தொடர்ந்து வேலை செய்யலாம்.

இரண்டு பேருடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த அச்சகத்தை பல சவால்களைத் தாண்டியே இந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளேன். இன்று சர்வதேசரீதியில் வாடிக்கையாளர்களை கொண்ட அச்சகமாகத் திகழ்கின்றது. ஆனால் இன்றும் நான் திருப்தியடையவில்லை. இன்னும் பல கனவுகளைக் காணகின்றேன். 2016 ஆம் ஆண்டு இன்னும் பல பரிமாணங்களை கரிகணன் அச்சகம் காணும்' என்கிறார் நம்பிக்கையுடன்.







மணமகன் விபரம் மணமகள் விபரம்

| பதிவு இல : 3998 | பதிவு இல : 4810 | பதிவு இல : 4912 | பதிவு இல : 4894 |
|---|---|---|---|
| பிறந்த வருடம் : 1974 | பிறந்த வருடம் : 1982 | பிறந்த வருடம் : 1973 | பிறந்த வருடம் : 1982 |
| வதியும் நாடு : இலங்கை | வதியும் நாடு : இலங்கை | வதியும் நாடு : இலங்கை | வதியும் நாடு : இலங்கை |
| பிறந்த இடம் : இணுவில் | பிறந்த இடம் : யாழ்ப்பாணம் | பிறந்த இடம் : வல்வெட்டித்துறை | பிறந்த இடம் : மானிப்பாய் |
| தொழில் : Pharmacist | தொழில் : Doctor | தொழில் : Teacher | தொழில் : Bank Officer |
| நட்சத்திரம் : பூராடம் (துனுசு) | நட்சத்திரம் : சுவாதி (துலாம்) | நட்சத்திரம் : உத்தரம் (சிம்மம்) | நட்சத்திரம் :திருவாதிரை (மிதுனம்) |
| கிரகபாவம் : 28 | கிரகபாவம் : 39 | கிரகபாவம் : 23 | கிரகபாவம் : 23 |
| குலம் : வேளாளர் | குலம் : வேளாளர் (சைவம்) | குலம் : வேளாளர் | குலம் : வோளர் |

| பதிவு இல : 4891 | பதிவு இல : 3299 | பதிவு இல : 4765 | பதிவு இல : 4515 |
|---|---|---|---|
| பிறந்த வருடம் : 1982 | பிறந்த வருடம் : 1979 | பிறந்த வருடம் : 1987 | பிறந்த வருடம் : 1990 |
| வதியும் நாடு : இலங்கை | வதியும் நாடு : இலண்டன் | வதியும் நாடு : கனடா | வதியும் நாடு : இலங்கை |
| பிறந்த இடம் : நல்லூர் | பிறந்த இடம் : வடலியடைப்பு | பிறந்த இடம் : அல்லைப்பிட்டி | பிறந்த இடம் : யாழ்நகரம் |
| தொழில் : Development Officer | தொழில் : Dietician | தொழில் : Charted Accountant | தொழில் : Engineer |
| நட்சத்திரம் : உத்தராடம் (துனுசு) | நட்சத்திரம் : சித்திரை (கன்னி) | நட்சத்திரம் : உத்தராடம் (மகரம்) | நட்சத்திரம் : கார்த்திகை (ரிஸபம்) |
| கிரகபாவம் : 16 | கிரகபாவம் : 45 | கிரகபாவம் : 2 | கிரகபாவம் : 2 |
| குலம் : வேளாளர் | செவ்வாய் : 12 | குலம் : வேளாளர் | குலம் : வேளாளர் |
| | குலம் : வேளாளர் | | |

www.arunthathee.com

இலங்கை : 0777 164 524 | இலண்டன் :0044 203 475 2590


# 'ரொப்' கலகல அரசியல்வாதிகள்



நமது அரசியல்வாதிகள் அனல் பறக்கும் அறிக்கைகள் விடுவதை பார்த்துவிட்டு, அவர்கள் எல்லோரும் எப்பொழுதும் முகத்தை 'உர்' என வைத்துக் கொண்டிருக்கும் ஆட்கள் என நினைத்து விடாதீர்கள். அவர்கள் விடும் அனல்பறக்கும் அறிக்கைகளை பார்த்துவிட்டு, சிங்களபேரினவாதத்தின் குடலை உருவி தோளில் போட்டுவிட்டுத் தான் மறுவேலை பார்ப்பார்கள் என நீங்கள் நினைத்தால்... நீங்கள் மிக அப்பாவிகள். இன்னும் கற்றுக் கொள்ள எவ்வளவோ உள்ளது.

எவ்வளவுதான் கறாரான அறிக்கைவிட்டாலும் நம்மாட்களின் நகைச்சுவை உணர்விற்கு பஞ்சமில்லை. அதனை நிரூபிப்பதைப் போலத்தான் பல சமயங்களில் அவர்களின் நடவடிக்கைகளும் இருக்கும். அதிரடி அறிக்கைகள், கலகல அரசியல், விறுவிறு நடவடிக்கைகள் என கதிகலங்க வைத்த அரசியல்வாதிகள் பற்றிய விபரமிது.





எதைச் செய்தாலும் நாலுபேர் திரும்பிப்பார்ப்பது மாதிரி காரியம் செய்தவர்கள், எதைப்பேசினாலும் ஒருமுறை காதுகொடுத்து கேட்டுவிட்டு செல்வதைப் போல பேசியவர்கள் இவர்கள். அதனாலேயே பரபரப்பாக பேசப்பட்டவர்கள். இவ்வளவு பீடிகை எதற்கு மக்களே.. விபரமாக சொல்லிவிடுகிறோம். அதாவது, கடந்த வருடத்தில் இணையவாசிகளால் அதிகமாக கலாய்க்கப்பட்டவர்கள் விபரம் இது. இவர்கள் நல்லவர்கள், வல்லவர்கள்தான். எதைச் செய்தாலும் நாலு பேருக்கு நல்லது நடக்க வேண்டுமென நினைப்பவர்கள் தான். ஆனால் இந்த இணையவாசிகளிற்கும் தீனி போட்டுவிடுகிறார்கள்.

### சிங்கம்... சிவாஜிலிங்கம்

சிவாஜிலிங்கம் என்ற பெயருக்கு ஒத்தகருத்து சொல் சிவகாசி பட்டாசு. கொளுத்திவிட்டால் போதும் சீறிச் சீறிச் வெடிப்பார். சிவாஜியின் சீற்றத்தாலேயே கைதடியின் வெப்பநிலை உயர்ந்துவிடுகிறதென கலாய்கிறார்கள் என்றால் பார்த்து கொள்ளுங்களேன். சற்றே 'ரெம்பரேச்சர்' எகிறினால் செங்கோலை தூக்கிக் கொண்டும் எஸ்கேப் ஆகிவிடுவார்.

முள்ளிவாய்க்கால் நினைவுநாள், மாவீரர்தினம் மாதிரியான நாட்களில் இணையவாசிகளில் ஒரு பகுதியினர் தமது புரொபைல் பிக்சரை சிவாஜிலிங்கமாக மாற்றாத குறையாக நிற்பார்கள். மற்றப் பகுதியினர் ஓவராக ஓட்டுவார்கள்.

இந்த நாட்களை கடந்தும் சிவாஜிலிங்கம் இணையத்தில் ஸ்கோர் செய்வார். ஜனாதிபதி தேர்தலில் மகிந்தவுடனே 'தம்ஸ்' கட்டி குருணாகலில் போட்டியிட்டு பரபரப்பூட்டினார். மாவீரர் தினத்தை அனுட்டித்தால் குற்றமென காவல்த்துறை அறிவித்தால், 'எல்லோரும் கொண்டாடுங்கள்' என மறுநாள் இணையவாசிகளின் பேசுபொருளாவார். எப்படியோ இணையவாசிகளால் அதிகம் கொண்டாடப்படுதும், ஓட்டப்படுவதும் சிவாஜிலிங்கம்தான்.

### ரா ரா... ராஞ்தம்பிராசா

கடந்த வடமாகாணசபை தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்பில் களமிறங்கியவர். அப்பொழுதே பரபரப்பை ஆரம்பித்து விட்டார். அங்கஜன் குழு தனது வாகனத்தை தாக்கியதென கூறி, யாழ் மத்திய பேரூந்து நிலையத்திலேயே போராட்டம் செய்தார். பின்னர் தன்னந்தனி ஆளாக உண்ணாவிரதம் இருந்தார். நடைபயணம் செய்தார்.

அண்மைக்காலமாக அவர் வெளியிடும் அறிக்கைகள்தான் அதிகம் அதகளப்படுத்துகிறது. எனக்கு அச்சுறுத்தல், தேடுகிறார்கள், தலைமறைவாக வந்தேன் என ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தி தெறிக்க விடுவார். பேஸ்புக்கிலும் அசராமல் செயற்படுபவர். நீண்டநாள் அமைதியாக இருந்தவர், மகனைக் காணவில்லை, மனேஜரை கடத்தினார்கள் என மீண்டும் விறுவிறு அறிக்கைகள் விட்டு மறுபடியும் 'போர்ம்' ஆகியுள்ளார். இணையவாசிகள் வறுத்தெடுக்கும் அடுத்த பிரபலம் இவர்தான்.

நடப்பு அரசியலின் முக்கிய செய்திகள் அனைத்தையும் பேஸ்புக்கில் பகிர்ந்து, சீரியஸான பேஸ்புக் பக்கமாக தனது கணக்கை பேணினாலும், அவரது அறிக்கைகள் எப்படியோ இணையவாசிகளின் கலாய்ப்பிற்குரியதாகிவிடுகிறது.



### அனல்... அரியநேத்திரன்

கடந்த பாராளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்த தமிழ்தேசிய கூட்டமைப்பின் எம்.பி. பேஸ்புக்கில் அதிகம் அக்டிவாக உள்ள அரசியல்வாதிகளில் ஒருவர். ஆனால் என்ன, இணையவாசிகளிடம் சிக்கி சீரழியும் விதமான கருத்துக்களைத்தான் எழுதுவார். அடிக்கடி துரோகிகளை பட்டியல்படுத்தும் 'அதிதீவிர தியாகி'யாக இவர் இருந்தாலும், அந்த அரசியல் சமூகஊடகத்தில் அதிக வரவேற்பை பெறவில்லை. அவரது கருத்தின் கீழேயே நாக்கை பிடுங்குவதை போன்ற கேள்விகள் கேட்பவர்களும் உள்ளனர்.

முகவரியில்லாத இணையங்கள் வெளியிடும் மொடந்தலைக்கும் முழங்காலிற்கும் முடிச்சுப்போடும் செய்திகளையெல்லாம் சீரியசாக எடுத்து, பகிர்ந்து விவாதிக்கும் அரசியல்வாதி. அதனாலேயே அதிகமும் வறுத்தெடுக்கப்படுவார்.

அனல் பறக்கும் பேச்சு அவரது ஸ்டைல். அதற்கு உள்ளூரில் ஓரளவு வரவேற்பு உள்ளது. என்றாலும், இணைய உலகத்தின் அரட்டைக்குள்ளேயே அவை அதிகமும் சிக்கிக் கொள்கின்றன.

### வில்லங்க... விநாயகமூர்த்தி முரளிதரன்

முட்டுச்சந்தில் வைத்து அடித்துவிட்டு, அலுத்தபின்னர் போன் போட்டு இன்னொரு குழுவிடம் வடிவேலுவை அனுப்பிய கதையாக இவரது கதை உள்ளது. இணையவாசிகளிற்கு அலுக்கும் போதெல்லாம் சிக்கும் 'சைட்டிஷ்' இவர்தான். கன்னாபின்னாவென போட்டுத் தாக்குவார்கள். அதற்கு ஏற்றாற்போலத்தான் இவரது கருத்துக்களும், அரசியல் நடவடிக்கைகளும் இருக்கும். ஏதாவது சொல்லப்போக அது வில்லங்கத்தில் வந்து நிற்கும். அப்படித்தான் அண்மையில் 'யோசெப் பரராஜசிங்கம் பேசாமலிருந்தால் கொல்லப்பட்டிருப்பாரா' என பேஸ்புக்கில் இவர் எழுத விவகாரமானது.

யாராவது தமிழன் கல்தடுக்கி விழுந்தாலும் இவர்தான் காரணமென இணையவாசிகள் நம்புவதால், ஓய்வாயிருக்கும் போதெல்லாம் வறுத்தெடுக்கிறார்கள். போதாதற்கு அவர்கள் படித்த போட்டோசொப், அனிமேசனையும் பாவித்து அவரை கலாய்க்கிறார்கள். கற்றவித்தைகளை மொத்தமாக பாவித்து விதவிதமான படங்களை வடிவமைத்து பகிர்கிறார்கள்.





# பெண்களை கவரும் ஆண்கள்

இரும்பு போல இறுக்கி இறுக்கி மனதை பூட்டு போட்டாலும் என்றோ ஒருநாள் காதல் லயப்பட்டு அந்த பூட்டு உடைய போகுது என்று சில பெண்களை கேலி செய்யும் ஆண்கள் உள்ளனர்தான். அதில் உண்மையுமுண்டுதான். பெண்ணோ ஆணோ திருமணத்தின் முன்போ பின்போ என்றோ ஒரு நாள் காதல் வயப்பட்டால் மட்டுமே வாழ்க்கை இனிக்கும் என்பார்கள்.

ஆண்களைவிட பெண்களின் மனதில்தான் ஆசைகள் அதிகம் இல்லையா? இதனால் தான் தமக்கு வாழ்க்கை துணையாக வரப்போகும் மன்மதன் எப்பிடியெல்லாம் இருக்கவேண்டும் என்று மனதுக்குள் மன்மத சிலையே உருவாக்கி வைப்பர் நமது பெண்கள். அந்த சிலை சற்று சரிந்தாலும் போச்சு. நொருக்கி போட்டுவிடுவர். பேண்களிற்கு பிடித்தமானவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று பெரும்பாலான பெண்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் சிலவற்றை பார்ப்போம்.

1. பெண்கள் எப்பெல்லாம் பேசுகிறார்களோ அதெல்லாவற்றையும் கவனமாக கேட்க வேணும். நீ பேசும் போது அழகாக இருக்கிறாய் என்று ஒரு பிட்ட கூட போடலாம். ஆனால் 'கொஞ்ச நேரம் கதைக்காமல் இரு பார்பம்' இப்படி உறுக்கினா உங்கள் காதல் நின்று பிடிக்கிறது கஸ்ரம் தான்.
2. எப்பவுமே எந்த விடயத்தையும் சந்தேகப்படாமல் உள்ளதை உள்ளபடி முகத்துக்கு நேர பேசும் ஆண்களைதான் அதிகம் விரும்புவர் பெண்கள். அதுவும் நீ இப்படி செய்தியாமே உண்மையா என்று கேட்பதை விட 'நீ இப்படி செய்ததாக அவன் கூறினான். நான் நம்பல. ஆனால் இப்படி கதைக்காம நாம பாத்து கிட்டா சரி' இப்படி கூறும் ஆண்களை இன்னும் அதிகமாக விரும்புகின்றனர் நமது பெண்கள்.
3. தொடர்பாடலை அதிகம் விரும்புவது பெண்கள் தான். எனவே காதலன் தன் மீது அதிக பாசம் வைத்திருக்கிறாரா இல்லையா என்ற தீர்மானிக்க பெண்கள் பாவிக்கும் கருவி தொலைபேசி. அடிக்கடி தொடர்பு கொண்டு எதை யாவது பேச வேண்டும் என்று எதிர்பார்பார்கள். அப்படி பேசினால் போதும். பாசத்தை காட்டுவார்கள்.
4. பெண்களோடு பழகாத ஆண்களைவிட பெண்களுடன் பழகும் ஆண்களைதான் அதிகம் விரும்புவர். ஆனால் எல்லா பெண்களையும் விட தான் தான் எல்லா விதத்திலும் சிறந்தவள் என்று தன் காதலன் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்பர்.
5. பொறுப்பு நிறைந்த, உழைப்பில் ஆர்வம்காட்டும் ஆண்களை தான் இன்றைய பெண்கள் அதிகம் விருபுகின்றனர்.
6. எப்பவுமே வீரமும் துடுதுடுப்பும் இருக்க வேண்டும். பெண்களின் புன்னகையையும் அழுகையையும் புரிந்து கொள்ளும் ஆண்களே உண்மையான காதலர்கள் என நம்புகிறார்கள்.
7. குடிக்காத ஆண்களையும் பார்ட்டி என்ற வரும் போது தமது அனுமதியுடன் கொஞ்சமாக குடிக்கும் ஆண்களையும் பெண்கள் நேசிக்கின்றனர். ஆனால் குடியே வாழ்வு என்றவனை அடியோடு வெறுக்கின்றனர் நமது பெண்கள்.
8. மாதத்தில் ஒருநாளாவது கணவன் சமைத்த சமையலை சாப்பிட பல பெண்கள் ஆசையோடு காத்திருக்கின்றனர்.
9. எந்த சந்தர்ப்பத்திலும் மறுப்பு தெரிவிக்காமல் தனக்கு துணையாக பக்கபலமாக காதலன் அல்லது கணவன் இருக்க வேண்டும் என்பது பலரின் கனவாகவுள்ளது.
10. தொழில் விடயத்திலும் அலுவலகத்தில் நடந்த விடயங்களையும் பொதுவாக வீட்டிற்கு வந்ததும் பெண்கள் உளறி கொட்டி விடுவர். அதேபோல் ஆண்களும் இருக்க வேண்டும் என்பது பல பெண்களின் எதிர்பார்பு.

இப்படிதான் நமது பெண்கள் ஆண்களிடம் பல விடயங்களை எதிர்பார்க்கின்றனர். இதை புரிந்து கொண்டு அதற்கேற்றால்போல் செயற்படும் பட்சத்தில் உங்கள் காதல் வாழும் வளரும்.



கடந்தவாரம் மட்டக்களப்பில் பெய்த அடைமழை காரணமாக வாகரையின் சில காட்சிகள். மதுரங்கேணிக்குளம் பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் படும் சிரமங்கள் இவை.




வடக்கு மாகாணசபையின் அவசர அம்புலன்ஸ்சேவை கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் கடந்தவாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மருத்துவநிலைகளிலும், விபத்துக்களில் சிக்கியவர்களையும் இயன்றவிரைவில் உரிய சிகிச்சை மையங்களிற்கு கொண்டு செல்லும் நோக்கத்துடன் இது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

# மக்கள் குரல்



கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்தொழில் நீரியல்வள திணைக்களத்தின் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு ஒரு வருடம் கடந்து விட்டபோதும், இதுவரை திறக்கப்படாமல் அழகு பார்க்கப்பட்டு வருவதையிட்டு மீனவ அமைப்புக்களும், மக்களும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். மக்களிற்காக, மக்களின் பணத்தில் கட்டப்பட்ட கட்டிடம் அதிகாரிகளின் 'பிச்சல் பிடுங்கல்' காரணமாக திறக்கப்படவில்லையென்பது மக்களின் குற்றச்சாட்டு.

ஏ9 வீதியின் முறிகண்டிப் பகுதியில் இரண்டு வருடங்களின் முன்னர் இந்தக்கட்டிடப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தில் இரண்டு மாடிகளை கொண்டதாக கட்டிடம் அமைக்கப்பட்டது.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் மின்னலாக செயற்பட்டு கட்டிட பணிகள் நடந்தன. எனினும், கடந்த ஒருவருடமாக அனைத்து வேலைகளும் பாதியிலேயே நிற்கின்றன. பிரமாண்ட செலவில் அமைக்கப்பட்ட கட்டிடம் கேட்பாரில்லாமல் இருக்கிறது.

இழுபறிக்கு காரணம் என்னவென விசாரித்தால், பொறியிலாளர் மற்றும் அதிகாரிகளிற்கிடையிலான முட்டிமோதல்கள்தான் காரணம் என்கிறார்கள். பெரும்பாலும் நிறைவடையும் தறுவாயிலுள்ள கட்டிடத்தை முழுமையடைய விடாமல் தடுத்துள்ளது அதிகாரிகளின் முட்டிமோதல்.

கடற்தொழில் நீரியல்வள திணைக்கள பொறியிலாளருக்கும், கிளிநொச்சி மாவட்ட செயலக பொறியிலாளருக்கும் இடையிலான சிக்கலே இழுபறிக்கு கரணமென மீனவர் அமைப்புக்கள் கூறுகின்றன. அதிகாரிகளின் அடிபிடியால் கடற்தொழில் நீரியல்வள திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய நிரந்தர கட்டிடம் கிடைக்காமலிருக்கிறதென்பது அவர்களின் குற்றச்சாட்டு.

சுமார் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அந்த மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப அதிகாரிகளும், திணைக்களங்களும் முழுவீச்சுடனும் செயற்றினுடனும் செயற்பட வேண்டிய தருணம் இது. ஆனால், இப்பொழுது நடக்கும் இழுபறி தம்மை மிகவும் பாதிக்கிறதென மீனவஅமைப்புக்கள் குற்றம் சுமத்துகின்றன.

யுத்தத்தால் பெரிதும் அழிவுகளை சந்தித்த நகரங்களில் கிளிநொச்சியும் முதன்மையானது. யுத்த பாதிப்பிற்குள்ளான பிரதேசங்களையும், மக்களின் வாழ்வையும் மீளக்கட்டியெழுப்ப அரசு முழு அக்கறை காட்டவில்லையென்பது நீண்டகாலமாக இருந்து வரும் குற்றச்சாட்டு. அள்ளிக் கொடுக்காவிட்டாலும், கிள்ளியாவது அரசு கொடுத்த நிரந்தர கட்டிட வாய்ப்பை நமது அதிகாரிகளின் 'பிச்சல் பிடுங்கல்' தாமதமாக்கியுள்ளது. இதைத்தான் ஆசாரி விட்டாலும், பூசாரி விடாத கதையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வடக்கு அபிவிருத்தியில் அரசு பாராமுகமாக இருக்கிறதென குற்றம்சாட்டிக் கொண்டு, தமது கடமைகளை சரிவர செய்யாமலிருக்கும் அதிகாரிகளின் மெத்தனப் போக்கு கிளிநொச்சி மீனவ சமூகத்தை பெரிதும் விசனமடைய வைத்துள்ளது. இதுகுறித்து பல்வேறு அதிகாரிகளிடம் முறையிட்டும் பலன்கிட்டவில்லையென்பது மக்களின் குற்றச்சாட்டு.


உரிய அதிகாரிகளே.. இது உங்கள் கவனத்திற்கு!

தீபம் தொலைக்காட்சி குழுமத்தில் இருந்து வெளிவரும் தீபம் வார இதழின் பின்வரும் பணி நிலை வெற்றிடங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுப்படுகின்றன.

01. நிர்வாக உத்தியோகத்தர் [ஆண்] (Administration Officer)
ஆங்கிலத்தில் எழுதவும், பேசவும் மற்றும் நிர்வாக திறன் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

02. கணக்குப் பதிவாளர் [ஆண் - பெண்]
உயர் தரத்தில் கணக்கியல் கற்றதுடன் கணக்கியல் துறையில் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.


மேற்படி விண்ணப்பங்களை 18.01.2016 இந்கு முன்னர் பதிவு தபாலில் அனுப்பி வைக்கவும்...




இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
021 221 6633
தீபம்


விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாக பணிப்பாளர்
நோர்ச்சி மீடியா (பிறைவேட்) லிமிடெட்
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.


5 வருடங்களை நிறைவு செய்யும்...
யாழ் நகர மத்தியில் அமைந்து வடமாகாணத்தில் முன்னணியில் திகழும்





TILKO JAFFNA CITY HOTEL
An Ideal place for your stay in Jaffna

















Tilko Jaffna City Hotel (Pvt) Ltd
No: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel : +94 21 222 5969 | Fax : +94 21 222 7291
Email : info@cityhoteljaffna.com
Web : www.cityhoteljaffna.com
HOT LINE +94 21 7200 707

செல்வம்
selvakumark04@gmail.com



# வவுச்சர் வண்டவாளம்





நமது கல்வித்துறையில் சீர்திருத்தங்கள் தேவையென பரவலான கருத்து உள்ளது. சிறிய வயதிலேயே மாணவர்களிற்கு முதுகில் புத்தகச் சுமையும், மூளைக்குள் பாடச்சுமையையும் சுமத்துவது போதாதென இன்னொரு பெரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது வவுச்சர் மூலம் பாடசாலைச்சீருடை வழங்கும் திட்டம். இருக்கின்ற சுமைகள் போதாதென வவுச்சர் சுமையால் மாணவர்களும், பெற்றோர்களும் தலையை பிய்த்துக் கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

இதுவரை பாடசாலைகளில் வழங்கப்பட்டு வந்த இலவச சீருடைக்கு பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட வவுச்சர் திட்டமே சர்ச்சையை கிளப்பியுள்ளது. இந்த திட்டத்திற்கு கணிசமான எதிர்ப்பு கிளம்பியுள்ளது. துணிக்கடைக்காரர்கள் பலர் பொறுப்பில்லாமல் நடந்து 'சுருட்டிக் கொள்ள' வாய்ப்பேற்படுத்தியுள்ளதென்பது அவர்களின் குற்றச்சாட்டு. பாடசாலை சீருடை திட்டத்தில் நடந்த நிதி மோசடிதான் வவுச்சர் திட்டத்தை அறிமுகப்படுத்தியதென்பது கல்வியமைச்சின் கருத்து. சட்டிக்குள்ளிருந்து நெருப்பிற்குள் விழுந்த கதையா என்பது சாதாரண மக்களின் கேள்வி.

வவுச்சர் திட்டம் கடந்த ஆண்டு இறுதியில் அறிமுகமானது. ஆரம்பத்திலிருந்தே கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. முதலில் போர்க்கொடி தூக்கியது அதிபர்கள். கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அப்பொழுது ஒரு கறாரான அறிக்கை வெளியிட்டிருந்தார். 'வவுச்சர்முறையை சீர்குலைக்கும் அதிபர்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்பது அவரது அறிக்கையின் சாரம். வவுச்சர் முறையின் மூலம், மாணவர்கள் தமக்கேற்ற மாதிரி துணியை கடைகளில் வாங்கலாமென்று அரசு நம்புகிறது. ஆனால், அரசு நினைப்பதைபோல நிலைமையில்லையென மாணவர்களின் பெற்றோர்கள் குற்றம்சாட்டுகிறார்கள்.

கடைகளில் வழங்கப்படும் துணி தரக்குறைவாக உள்ளது, துணியின் அளவு போதாமல் உள்ளது என்ற இரண்டு குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன. பாடசாலைகளில் சீருடை வழங்கும்போது அனைவருக்கும் ஒரேதரமுடைய துணி வழங்கப்படும் என்பதற்கு உத்தரவாதம் இருந்தது. ஆனால் வவுச்சர் முறையில் அந்த உத்தரவாதம் இல்லையென்பதே சிக்கலின் ஆரம்பம். கடைகளில் வழங்கப்படும் துணிகளின் தரம் குறைவாக உள்ளதென்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது. சில கடைக்காரர்கள் பொறுப்பில்லாமல் நடக்கிறார்கள் என்பதை நம்முடன் பேசிய துணிக்கடை உரிமையாளர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அப்படியானவர்களால் ஒட்டுமொத்த துணிக்கடைகாரர்களும் பழியேற்க வேண்டியுள்ளது என்பது அவர்களின் கவலை.

வவுச்சர் நடைமுறையில் சில துணிக்கடைக்காரர்கள் 'கை வைப்பதால்' பாதிக்கப்படுவது கிராமப்புற, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள்தான். கடைகளில் வழங்கப்படும் தரமற்ற துணிகளை அணிவதைத்தவிர மாற்றுவழி அவர்களிற்கு கிடையாது. சக மாணவனொருவன் முறையான கடையில் வாங்கிய நல்ல துணியில் சீருடையணிந்து வர, தரமற்ற துணியில் சீருடையணிந்து வரும் மாணவன் மனப்பாதிப்பிற்குள்ளாகும் வாய்ப்புக்கள் உள்ளன. மாணவர்களை தாழ்வுச்சிக்கல் போன்ற மனரீதியான பாதிப்புக்களுடன் வளரவைப்பது ஆபத்தானது.

வவுச்சர்துணி விவகாரத்தில் என்னதான் நடக்கிறதென்பதை அறிய ஒரு 'ரவுண்ட் அப்' வந்தோம்.

**பி.நந்தன்**
**குமாரசாமி புடைவைக்கடை யாழ்ப்பாணம்**

450 ரூபாய் பெறுமதியுடைய வவுச்சருக்கு 1.25cm சேட் துணியும் 60cm காற்சட்டைத் துணியும்தான் எங்களால் வழங்க முடியும். மாணவர்களுக்கு இந்த அளவுத்துணி போதுமானது. இந்த அளவைவிட கூடுதலான துணி தேவையில்லை. எங்கள் கடையில் அளவு குறைவாகவும் தரத்தில் குறைவாகவும் இருப்பதாக யாரும் சொல்லவில்லை. மற்ற கடைகளைப் பற்றி எங்களால் சொல்ல முடியாது. சில கடைகளில் மாறி மாறி கொடுப்பினம். யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களுக்கு நாங்கள்தான் கொடுத்திருக்கிறோம். உடம்பு பெருத்த மாணவர்களுக்குத்தான் போதுமானதாகஇருக்காது. மாணவிகளுக்கு பட்டசில்க்ஸ் துணி போதுமானது.

**ஆ.கோபாலகிருஷ்ணன்**
**ஆறுமுகம் புடைவைக்கடை யாழ்ப்பாணம்**

1.25cm துணி உடம்பு பெருத்த பிள்ளைகளுக்குப் போதுமானது. மெல்லிய உடம்புடைய பிள்ளைகளுக்கு 1cm துணி போதுமானது. துணியின் அளவு காணாது என்றால் திருப்பிக் கொண்டு வந்தால் நாங்கள் தருவோம். சில கடைக்காரர் துணி வழங்குவதில் குளறுபடி செய்துவிட்டார்கள். வெளியில் சொன்னால் எங்களுக்கே அசிங்கம். 100 ரூபாய்க்கு 1cm தரம் குறைந்த வெள்ளைத் துணி இருக்கிறது. இதை கொடுத்து விடுவார்கள். இந்தத் துணி சட்டையின் உள்ளே வைத்து தைப்பதற்கு மட்டும் பயன்படுத்துவார்கள். இந்த துணியை பொக்கெட் துணிகளுக்கு போன்றவற்றிற்கு பயன்படுத்துகிறார்கள்.

**கே.பிரசாந்**
**தையலாளர் யாழ்ப்பாணம்**

யாழ் இந்துக் கல்லூரி மாணவர்களின் சீருடைதான் நாங்கள் கூடுதலாக தைத்துக் கொடுக்கிறோம். ஒவ்வொரு கடையில் ஒவ்வொரு விதமான துணிகளைக் கொடுக்கிறார்கள். வவுச்சருக்கு கொடுக்கிற துணி காணாது என்றால் மிகுதி துணிக்கு பணத்தைக் கொடுத்து வாங்குகிறோம் என்று எங்களுடைய கடைக்கு வருகின்றவர்கள் சொல்லுகிறார்கள். தையலிற்கு கொண்டு வருபவர்களின் துணி காணாமல் வராது. அளவாக உள்ளது. ஆனால் தரம் தான் குறைவாக இருக்கிறது. துணி தரம் குறைவாக உள்ளதென்பதை சொன்னால், சிலர் மாற்றிக் கொண்டு வந்து தருகிறார்கள். சிலர் 'என்ன செய்ய முடியும். இதையே தையுங்கோ' என்று சொல்கிறார்கள்.

**இ.வளர்மதி**
**கந்தர்மடம்**


எனக்கு நாலு பிள்ளைகள். நாலு பேரும் பாடசாலையில் கல்வி கற்கிறார்கள். நாலு பேருக்கும் சீருடை துணிக்கான வவுச்சர் தந்தார்கள். யாழ் நகரில் இருக்கும் ககக புடைவைக்கடையில் துணிகளை வாங்கினேன். வவுச்சருக்கு பெறுமதியான 200 ரூபாய் துணியைத்தான் தருவோம் என்று கடைக்காரர் சொன்னார். தரமில்லாத துணியையும் தரமான துணியையும் கடைக்காரர் காண்பித்தார்கள். தரமான துணி 250 ரூபா. தரமில்லாத துணிதான் வவுச்சர் பணத்தில் வாங்கலாமென்றார். பின்னர் வேறு வழியில்லாமல் ஒரு மீற்றருக்கு 50 ரூபாய் கூடப் போட்டு நான்கு பிள்ளைகளுக்கும் நல்ல துணியை வாங்கினேன். கடைக்காரர் துணியை வெட்டும் அளவும் குறைவாக இருக்கிறது. '1.25cm துணி முழுமையாக தனக்கு கிடைக்கவில்லை. 10cm குறைவாக தந்துள்ளார்கள்' என்று எனக்குத் தெரிந்த ஒருவர் சொன்னார். பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்கள் கடைக்காரர் கொடுக்கும் தரமில்லாத துணியைத்தான் வாங்குகிறார்கள். இந்த சீருடை எவ்வளவு காலத்துக்கு நிலைத்து நிற்கும் என்று சொல்ல முடியாது.

**பா.கமல்ராஜ்**
**தையலாளர் யாழ்ப்பாணம்**

முன்னர் அரசு கொடுத்த துணி தரமான துணி. எந்தவொரு முறைப்பாடும் இல்லை. ஆனால் இப்ப வவுச்சர் மூலம் கொடுக்கிற துணி தரம் கெட்டதாக இருக்கிறது. மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனால் கடைக்காரர்களுக்குத்தான் இலாபம். எங்களிடம் வருவதில் எண்பது வீதமான துணி தரமில்லாமல்த்தான் உள்ளது. வவுச்சர் முறையை மாற்றி முன்னர் வழங்கியது போல வழங்கினால் மாணவர்களுக்கு நல்ல துணி கிடைக்கும். சீருடை துணி வழங்கலில் அரசு முறையான நடவடிக்கை



பி.நந்தன்



ஆ.கோபாலகிருஷ்ணன்



கே.பிரசாந்



இ.வளர்மதி



பா.கமல்ராஜ்


மகேசன் கஜேந்திரன்


த.குருகுலராஜா

எடுக்குமானால் இந்தக் குளறுபடிகளைஇல்லாமல்செய்யமுடியும். வவுச்சருக்கு தரமான துணியை சில கடைக்காரர்கள் வழங்குவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் வரம்போது, கல்வி அமைச்சு இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமானால் மாணவர்களுக்கான சீருடை வழங்குவதில் முறைகேடு இடம்பெறாது.

**மகேசன் கஜேந்திரன்**
**அதிபர்**
**நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்**

சீருடைக்கான துணி வழங்கும் திட்டம் 2007ம் ஆண்டிலேயே அரசாங்கத்தால் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு விட்டது. இப்பொழுது நேரடியாக சீருடையை வழங்காமல் அதற்கான வவுச்சரை மாணவர்களிடம் கொடுத்து, கடைகளில் வாங்க வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தமுறையால் அரசுக்கு இலாபம் ஏற்படக் கூடியதாக இருக்கும். பொதி செய்வது, வாகனத்தில் ஏற்றியிறக்கும் கூலிகள் இல்லாமல் போகிறது. எமது மாணவர்களிற்கான துணியை வாங்க 40க்கும் அதிக கடைகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்குதான் எல்லோரும் துணி வாங்கினார்கள். இதுவரை ஒரு குறையையும் நான் அறியவில்லை.

**த.குருகுலராஜா**
**வடமாகாண அமைச்சர்**
**கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை**

சீருடை துணியை இறக்குவதில் காலதாமதம் ஏற்படுவதால்த்தான் வவுச்சர் முறையை அரசு கொண்டு வந்தது. இதுபற்றிய பல்வேறு கருத்துக்கள் வந்தவண்ணமுள்ளன. இதில் குறைகள் இருந்தால், அதுபற்றி மத்திய கல்வியமைச்சருடன் பேசுவோம்.





**மன்னார் மடு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பூமலர்ந்தான் கிராமத்தின் காட்சியிது. மடு கோவில் வீதியிலிருந்து பிரிந்து செல்லும் வீதியிலுள்ள கிராம வீதியின் நிலையிது. தம்பனைகுளப்பகுதியை சேர்ந்த மக்கள் இங்கு குடியமர்த்தப்பட்டுள்ளனர். எனினும் முறையான வீதிகளே இங்கில்லையென்பது குறிப்பிடத்தக்கது.**

# வேலைவாய்ப்புக்காக காத்திருக்கத் தேவையில்லை!

**கார்த்திகா**
sukuna.k@gmail.com

பல்கலைக்கழகப் பட்டம் பெற்றாலென்ன, இல்லாவிட்டாலென்ன எல்லோருக்கும் இறுதியாகத் தேவைப்படுவது, வாழ்க்கையை நல்லவிதமாகக் கொண்டு நடாத்துவதற்குத் போதியளவு வருமானத்தை ஈட்டக்கூடிய ஒரு தொழில். ஆனால், நிரந்தர வேலை, ஓய்வூதியம் என்பவற்றுக்காக கோழி மேய்த்தாலும் அது அரசாங்க வேலையாக இருக்கவேண்டும் என்பதே, பெரும்பாலான மாணவர்கள் மற்றும் பெற்றோரது எதிர்பார்ப்பாகவும், கனவாகவும் இருக்கின்றது. அதனால், அரசாங்க வேலையை பெறும் நோக்குடனேயே கல்வி கற்கின்றனர்.

தனியே அரசாங்க வேலைகளுக்காக எந்தவொரு மாணவரையும் எந்த நாடும், எந்த அரசாங்கமும் படிப்பிப்பதில்லை. கல்வி என்பது எமக்கு முன்னே இருக்கும் வாய்ப்புக்களை அடையாளம் காணவும், அவற்றில் எமக்கு பொருத்தமானவற்றை தெரிவு செய்யவும, எங்களின் ஆற்றல்களைச் செம்மையாகப் பயன்படுத்தவும் உதவ வேண்டுமே தவிர வேலைவாய்ப்புக்காக காத்திருக்க வைக்கக்கூடாது. ஆனால், பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற பலர் வேலைவாய்ப்புக்காக பல வருடங்கள் காத்திருந்து காலத்தை வீணடிக்கின்றனர்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் இவ்வாறு யாரும் காத்திருப்பதில்லை. அவர்கள் தமது கல்வியறிவையும் இளமைக் காலத்தையும் வீணாக்கி கொண்டு அரசாங்கத்திற்கு சுமையாக இருக்காமல், தங்களுக்கான தொழில்களை தேடிக் கொள்கிறார்கள்.

அல்லது, தாங்களாகவே ஒரு தொழிலை உருவாக்கிக் கொள்கிறார்கள். இவ்வாறு உருவான தொழில்கள் தான் மோட்டார் சைக்கிள், கையடக்கத் தொலைபேசி முதல் கணினி வரையில் இன்று எங்களுடைய வாழ்க்கையை இலகுவாக்கும் பல உற்பத்திகளை எமக்கு தந்து கொண்டிருக்கின்றன. கல்வி, தொழில் தொடர்பாக அந்நாட்டு இளைஞர்களுக்கு உள்ள மனப்பாங்கே அந்த நாடுகளின் வளர்ச்சிக்கு காரணம்.

நம்முடைய நாட்டில் இந்த நிலைமை தலைகீழாகவே உள்ளது. சுயமாக ஒரு தொழிலை உருவாக்கி கொள்பவர்கள், புதிய தொழிற்துறைகள் பற்றி சிந்திப்பவர்கள், இருக்கின்ற தனியார் துறைகளில் தம்மை ஈடுபடுத்திக்கொள்பவர்கள் மிக மிக குறைவாகவே உள்ளனர். எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தின் கைகளையே நம்பிக் கொண்டிருக்கிறோம்.

### 88வீதமான வேலைவாய்ப்புக்கள்!

இன்றைய உலகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகஇருப்பது தனியார்துறையே. இதற்கு இலங்கை மட்டும் விதிவிலக்கா என்ன?. 12 வீதமான வேலைவாய்ப்புகள் மட்டுமே அரசாங்கத்துறையில் காணப்படுகின்றன. 88 வீதமான வேலைவாய்ப்புக்கள் தனியார் துறையிலேயே உள்ளன.

நாம் காலையில் எழும்பியதும் பல்துலக்கப் பயன்படுத்தும் பற்தூரிகை, பற்பசை முதற்கொண்டு, ஒரு நாளை நிறைவு செய்து இரவு நித்திரைக்குச் செல்லும்போது பயன்படுத்தும் பாய், தலையணை வரை தினமும் பயன்படுத்தும் 90 சதவீதமான பொருள்கள், சேவைகளை தனியார்துறையே நமக்கு வழங்குகிறது.

அதுமட்டுமல்ல, போருக்குப் பிந்திய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இப்போது தனியார்துறை மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், நிதிக்கம்பனிகள், சந்தைப்படுத்தல் நிறுவனங்கள், சுப்பர் மாக்கட்டுகள், வாகன உற்பத்தி நிறுவனங்கள், ஆடைத் தொழிற்சாலைகள் என்று பலவாகப் பல்கிப் பெருகும் புதிய புதிய தொழிற்துறைகளில் இப்போது ஏராளமான தொழில்வாய்ப்புக்கள் பெருகிக் கிடக்கின்றன.

### எல்லையற்ற வருமானம்... தகைமைகள் அவசியம்...

அரசாங்க துறையைவிட எல்லையின்றி அதிக வருமானம் பெறக்கூடிய தனியார்துறையில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு பட்டமோ, பாடசாலைக் கல்விச் சான்றிதழ்களோ மட்டும் இருந்தால் போதாது. ஒவ்வொரு துறையிலும் பணியாற்றுவதற்குத் தேவையான தொழில்சார் திறன்களே இங்கு எதிர்பார்க்கப் படுகின்றன.

எனவே, மாணவர்கள் புத்தகப் படிப்போடும், சான்றிதழ்களோடும் மட்டும் நின்றுவிடாடமல், தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான தகைமைகளை இப்போது முதலே வளர்த்துக் கொண்டுவிட்டால், இலகுவாக சிறந்த தொழில்வாய்ப்புக்களைப் பெற்று அதிக வருமானமீட்டி மனம் விரும்பியவாறு வசதியான வாழ்க்கையையும் அமைத்துக் கொண்டுவிடலாம்.

**தனியார் துறையில் பணியாற்றுவதற்கு மாணவர்கள், இளைஞர், யுவதிகள் தம்மை தயார்படுத்திக்கொண்டு, தனியார்துறை வேலைவாய்ப் புக்களை சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.**

இதேவேளை, தற்போது மட்டுமன்றி இனிவருங் காலங்களிலும் தனியார் துறையிலேயே அதிக வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே, தனியார் துறையில் பணியாற்றுவதற்கு மாணவர்கள், இளைஞர், யுவதிகள் தம்மை தயார்படுத்திக்கொண்டு, தனியார்துறை வேலைவாய்ப்புக்களை சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதனால், நமது நாட்டில் வேலைவாய்ப்பற்றோர் வீதம் குறைவடையும் என்பதுடன், நாடு பொருளதார வளர்ச்சியிலும் முன்னேற்றமடையும்.





# டூரிங் டாக்கீஸ்

## தமிழால் வாழும் எமி

என்னை வாழ வைத்தது தமிழ் சினிமாதான் என உருகுகிறார் எமி ஜக்சன். மொடலிங், விளம்பரப்படங்கள் என சுற்றிக் கொண்டிருந்தவரை இழுத்து வந்த 'மதராசப்பட்டினம்' படம்மூலம் நடிகையாக்கினார்கள். இப்பொழுது பிசியான நடிகையாகிவிட்டார். விஜயுடன் 'தெறி', தனுசுடன் 'தங்கமகன்', ரஜினியுடன் '2.0' படங்களில் நடித்து வருபவர்.



## சல்மானின் வீட்டுக்கு வரும் வெளிநாட்டு குத்துவிளக்கு

ஒருவழியாக சல்மான்கான் வாழ்விலும் ஒருவழி தெரிய ஆரம்பித்துள்ளது. 50 வயதுவரை தனிக்கட்டையாக வாழ்ந்து வந்த மனிதர் விரைவில் திருமணம் செய்யவுள்ளார் என பேசப்படுகிறது. அதுவும் வெளிநாட்டு காதலி. ருமேனியா அழகியான லூலியாதான் காதலி என்கிறார்கள். அவர் என் நண்பி என இதுவரை சொல்லிவந்தார் சல்மான். ஆனால் அண்மையில் சல்மானின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் லூலியாவிற்குத்தான் முதலில் கேக் ஊட்டியுள்ளார். இதன்பின்னர்தான் விடயம் கசிய, துருவிப்பார்த்ததில் விடயம் உண்மையென்கிறார்கள்.



## 'தோழி'யாகும் மனைவி

விஜயசாந்தி, நக்மா, ரோஜா, ரம்யா வரிசையில் நமீதாவும் அரசியலில் குதிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அம்மணி இன்னும் படவாய்ப்பு வரலாமென காத்திருக்கும் இடைவெளியில், அவரை பின்னுக்குத்தள்ளிவிட்டு இன்னொரு நாயகி அரசியலில் குதிக்கவுள்ளார். 'யுவன்யுவதி' படநாயகி ரீமா கல்லிக்கல்தான் அந்த அரசியல் நாயகி. அசிக்அபுவை இவர் திருமணம் செய்தார். திருமணத்தின் பின்னர் அரசியல் கருத்துக்களை அடித்துவிட்டு கொண்டிருக்கிறார். அத்தனையும் இடதுசாரி கருத்துக்கள். இப்படியொரு 'தோழியை' ஏன் விட்டுவைக்க வேண்டுமென நினைத்த அந்தஊர் இடதுசாரி கட்சிகள் அம்மணியை தேர்தலில் குதிக்கச்சொல்லி அழைப்பு விட்டுள்ளனவாம்.



## அம்சமான அமுல்பேபி

இதுவரை அமுல்பேபியாக வலம்வந்த ப்ரிணிதி சோப்ராவின் புதிய கட்டழகு படங்கள் தீயாக பரவி வருகின்றன. முன்னர் 82 கிலோவில் டூயட் பாடும் ஹீரோக்களை விழிபிதுங்க வைத்த ப்ரிணிதி இப்பொழுது சிக்கென மாறிவிட்டார். ஜிம், உடற்பயிற்சிகளில் விருப்பமில்லாத அவர் எப்படி உடல்எடையை குறைத்தார் என்ற ரகசியத்தை சொல்லியுள்ளார். 'எல்லாப் பெண்களையும் போல சிக்கென இருக்க விரும்பினேன். அப்படியான தோற்றமிருந்தாலே இறுக்கமான ஆடைகளை அணிய முடியும். கேரள தற்காப்பு கலையான களரியை கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். 10 மாதத்தில் இப்படியாகிவிட்டேன்' என்கிறார்.



## குடும்ப பெண்ணாக மாறிய தமன்னா

தமிழ் தெலுங்கு திரை உலகில் கவர்ச்சி நாயகியாக வலம் வருபவர் தமன்னா. கேடி, அயன், படிக்காதவன், பையா, பாகுபலி உள்பட பல படங்களில் கவர்ச்சி கலந்த நடிப்பால் ரசிகர்கள் மனதில் இடம் பிடித்தார். வேங்கை, வீரம் படங்களில் குடும்பப்பாங்காக நடித்துள்ளார். என்றாலும் பெரும் பாலும் நகர்புறத்து நாகரீக நங்கையாகவே நடித்து இருக்கிறார். இப்போது, சீனுராமசாமி, இயக்கும் 'தர்மதுரை' படத்தில் விஜய்சேதுபதி ஜோடியாக நடிக்க தமன்னா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதில் மதுரை பகுதி பெண்ணாக அழுத்தமான வேடத்தில் நடிக்கிறார். ஏற்கனவே சீனுராமசாமி இயக்கிய 'தென்மேற்கு பருவக்காற்று' படம் போன்று இதுவும் மண்வாசனையை சொல்லும் படம். 'தர்மதுரை' படத்தில் டூயட் பாடாத கதாநாயகியாக தமன்னா வர இருக்கிறார். இதற்காக முழுமையான மதுரைப் பெண்ணாக மாறுகிறார்.

## கொடுத்து வைத்த பையன்

ஜீ.வி.பிரகாஸ்குமாரை கொடுத்து வைத்த பையன் என இளவட்ட ஹீரோக்கள் பொறாமையுடன் பார்க்கிறார்கள். பிறகென்ன இருக்காதா?. இவர்கள் எல்லாம் ஈயோட்டிக் கொண்டிருக்க, அறிமுகமான கொஞ்சகாலத்திலேயே மாஸ் ஹீரோ லெவலிற்கு வாய்ப்புக்கள் வந்தால் எரியத்தானே செய்யும். ஜீ.வியின் புதிய படத்தில் இரண்டு நாயகிகள் என்பதுதான் இப்போதைய பரபரப்பு. ஒருவர் ப்ரியா ஆனந்த். மற்றவர் கீர்த்தி சுரேஷ். பிகாஷ்ராஜும் முக்கிய வேடத்தில் நடிக்கிறாராம்.

## 'நோ' ஐயிற்றங் கேர்ள்

'ஐயிற்றம் சோங்' பற்றி துணிச்சலாக கருத்து சொல்லியுள்ளார் ராதிகா ஆப்தே. அது அங்கங்களை கவர்ச்சியாக காட்டி, ஆபாசமாக ஆடுவது என்றாகிவிட்டது. நான் அப்படியொருபோதும் செய்ய மாட்டேன். கதைக்கு தேவையன்றால் கவர்ச்சியாக நடிப்பேனே தவிர, ஆபாசமாக ஆட மாட்டேன் என்றிருக்கிறார். முன்னணி நாயகிகளே அவ்வப்போது ஒருமுறை குலுக்கல் நடனமாடி கல்லாப்பெட்டியை நிரப்பிவரும் நிலையில், ராதிகாவின் அதிரடி கருத்து வெளியாகியுள்ளது.



# வைத்தியரிடம் கேளுங்கள்

**இரவில் நித்திரை குறைவு. உடல் வலி. எழுந்து வேலை செய்ய முடிவதில்லை. ஒரே சோர்வாக இருக்கிறது. இயற்கை மருத்துவம் சொல்வீர்களா?**



**வைத்தியர் கந்தையா சோதிதாசன்**
drsothithas@gmail.com
0776284687

**காயத்திரி (20)**
**இராசாவின் தோட்டம். யாழ்ப்பாணம்**

**கேள்வி:** எனக்கு ஆண்களைப் போல மீசை வளர்கிறது. நீக்க என்ன செய்யலாம்?

**பதில்:** இளம் பெண்களில் சிலருக்கு ஆண்களைப் போல்மீசை வளர்வதுண்டு. இதைப் போக்க கஸ்தூரி மஞ்சளைப் பொடித்து அல்லது குழைத்து முகத்தில் பூசிக் கழுவி வந்தால் முடி வளர்வது தடைப்படும். முகத்தில் பொலிவு ஏற்படும்.

**சாரங்கன் (28)**
**கொட்டடி, யாழ்ப்பாணம்**

**கேள்வி:** சளித் தொல்லையால் மிகவும் அவதிப்படுகிறேன். நீங்கள் குறிப்பிட்ட மருந்துகள் பாவித்தும் அதிக பலன் இல்லை. சுவாசிப்பதில் சிரமப்படுகிறேன். வேறு மருந்துகள் பாவிக்கலாமா?

**பதில்:** அதிக அளவில் சீற்ற மடைந்த கபம் மூச்சுக் குழாய் மற்றும் நுரையீரல் பகுதியில் சேரும் போது அடைப்பை ஏற்படுத்துகிறது. .நீங்கள் முக்கியமாக கபத்தைச் சீற்றமடையச் செய்யும் உணவையும், செயல்பாடுகளையும் தவிர்ப்பது நல்லது.

பகலில் உறங்குதல், உடற்பயிற்சி செய்யாமை, உடலுழைப்பு இன்மை, இனிப்பு,புளிப்பு,உவர்ப்புச்சுவைகள் உள்ள பொருள்களை அதிகமாக உட்கொள்ளுதல், குளிர்ச்சி, எளிதில் செரிக்காத உணவு, சம்பா அரிசி, உளுந்து, கோதுமை, எள்ளு, அரிசி போன்றவை மாவினால் செய்யப்படும் தின்பண்டங்கள், தயிர், பால், கரும்புச் சாறு, நீர் மற்றும் நீர்ப்பாங்கான இடங்களில் வசிக்கும் விலங்குகளின் இறைச்சி, சுரைக்காய், பூசணி போன்ற கொடிகளில் காய்க்கும் காய்கறி வகைகள், உண்ட உணவு செரிமானடையும் முன் மீண்டும் உண்பது ஆகியவை கபத்தைச் சீற்றமடையச் செய்யும். இவற்றை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

தினமும் உடல் சக்திக்கு தகுந்த வாறு உடற்பயிற்சியும், மூச்சுப் பயிற்சியும் செய்வது அவசியம். உணவில் கேழ்வரகு, சோளம், கொள்ளு, வரகு தானியங்கள் சாப்பிட உகந்தது.

சுக்கு, மிளகு, கண்டந்திப்பிலி சேர்த்துக் காரமாய் உள்ள ரசம் சாப்பிட நெஞ்சுக் கூட்டில் படிந்தி ருக்கும் சளி இளகி மூச்சு சீராகச் செல்ல வழியை ஏற்படுத்தித் தரும்.

இதனால் இளகிய சளியை வெளியே கொண்டுவர வசம்பு, கடுகு, இந்துப்பு இவற்றை சம அளவு சூர்ணம் செய்து சிறிதளவு வெந்நீருடன் கலக்கி சாப்பிட்டு, மேலும் வெந்நீர் நிறைய குடிக்கவும். உடனே வாந்தி வரும். கபம் வெளியே வந்துவிடும்.

பிறகு மஞ்சள், ஓமம் இரண்டையும் தூளாக்கி துணித்திரியில் சுற்றிக் கொளுத்தி வரும் புகையை மூக்கினாலும் வாயினாலும் உறிஞ்சவும். நீலகிரித் தைலத்தை கொதிக்கிற வெந்நீரில் ஊற்றி ஆவி முகத்திலும் தலையிலும் படும்படியாக வேது பிடிக்கவும்.

ஆடாதோடைப்பாணி, தசமூலாரிஷ்டம் என்பவற்றோடு 1 வில்வாதி மாத்திரையை அரைத்து அதனுடன் கலந்து காலை இரவு உணவிற்குப் பிறகு எடுக்கவும். சுவாசகுடொரி தாளிசாதிசூரணம் என்பனவும் பயன் அளிக்கும்.



**சிதம்பர நாதன் , (49)**
**இணுவில், யாழ்ப்பாணம்.**

**கேள்வி :** எனக்குத் தூக்கம் சரியாக வருவதில்லை. அடிக்கடி என் வீட்டாரிடமே எரிந்து எரிந்து விழுகிறேன். மனசு படபடப்பாகவே இருக்கிறது. தொடர்ந்து களைப் பாக இருப்பது போன்றே உணர் கிறேன். பதற்றத்துடனே வேலைக் குப் போக வேண்டியதாக உள்ளது. எந்த நேரமும் எதைப் பற்றியாவது நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டே இருக்கிறேன். பயம் வரும்போதெல்லாம் 'நாம் ஏன் வாழ வேண்டும்?' என்ற எண்ணம்தான் எழுகின்றது'. மன பதட்டத்தை தவிர்க்க என்ன செய்யலாம்

**பதில்:** நீங்கள் சொன்ன அறிகுறி களின் படி மன அழுத்தத்திற் குள்ளாகி இருக்கிறீர்கள். நமது வாழ்வுமுறையை ஒழுங்குபடுத்து வதன் மூலம் மன அழுத்தத்தில் இருந்து விடுபடலாம்.

யோகாசனத்தில் ஈடுபடுதல் மன அழுத்தத்தைக் குறைக்க உதவும். காலையில் இதனை மேற்கொள்ள லாம் இயன்றளவு. தனிமையைத் தவிர்த்தல் நல்லது. நண்பர்களோடு சேர்ந்து இனிமையாக பொழுதை கழியுங்கள்.

உங்களுக்குப் பிடித்தமான வரிடம் மனம்விட்டுப் பேசுங்கள். நல்ல புத்தகங்களைப் படிப்பது மன அழுத்தத்தைத் தவிர்க்கும். மனதிற்குப் பிடித்த இசையைத் தொடர்ந்து கேட்பது மிக நல்லது. மனம் வேறு சிந்தனைக்குப் போகாமல் கட்டுப்படுத்தும் திறன் இசைக்கு உண்டு.

உணவு விடயத்திலும் கவனம் செலுத்துங்கள். அசைவப் பிரியர்கள் மீன் சாப்பிடலாம். அதில் உள்ள ஒமேகா_த்ரீ என்ற கொழுப்புத்திரவம் உங்கள் மனதை நல்ல நிலைக்கு கொண்டு வரும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இது தவிர திராட்சா அரிஸ்டம் பிருங்காமலதைலம் போன்ற மருந்து



களை வைத்திய ஆலாசனையுடன் பாவியுங்கள்.

ஜாதிக்காயை சூரணமாக செய்து சாப்பிடலாம்.ஜாதிக்காய் மன அழுத் தத்தை போக்கும். ஜாதிக்காயை லேசான சூட்டில் நெய்யில் வறுத்து இடித்து பொடியாக்கி வைத்து காலை மாலை பசும்பாலில் 4 கிராம் சூரணத்தை காய்ச்சி குடிக்கலாம்.

வாழ்க்கை அழகானது நண்பரே. வாழ்கையைநேசியுங்கள். மனச் சுமையில் இருந்து விடுபடலாம்.

**சுதர்சன் (29)**
**குருமன்காடு, வவுனியா**

**கேள்வி:** வரும் வாரம் திருமணம் செய்ய இருக்கிறேன். நான் மிகவும் மெலிவானவன். சிறுவயதில் சில தவறான பழக்கங் களால் குடும்ப வாழ்வில் சரியாக செயற்படமுடியுமோ என பயப்படு கிறேன். எனக்கு நீங்கள்தான் உதவ வேண்டும்.

**பதில்:** திருமணமான பல இளைஞர்களுக்கு வரக்கூடிய பயம் தான். நீங்கள் பயப்பட தேவை யில்லை. இளமையில் செய்த தவறான பழக்கங்களால் பாதிக் கப்பட்டதாக நினைப்பது தேவை யற்ற பயம். உடல்மெலிவாக இருப்ப தென்பது பெரியகுறை பாடே அல்ல. நீங்கள் வாழ்வை மகிழ்சியாக ஆரம்பிக்கலாம். ஆக பலவீனமாக உணர்ந்தால் ஜாதிக்காய், ஏலம், பாதாம்பருப்பு போட்டு காய்ச்சிய



# சொந்தமாக 'ஆய்' போவதெப்படி?



இந்திய மோகம்... இந்திய மோகம் என நம்மவர்கள் வாய்கிழிய கத்தினாலும் அவீதைக்கடந்து நம்மவர்களால் வாழ முடியா தென்பதே யதார்த்தம். தலையலங் காரம், உடையலங்காரம், நடை, பேச்சு, அதிகமேன் சிலர் சுவருடன் ஒட்டி உச்சா போகும்போது கூட, ஏதோ ஒரு படத்தில் ஏதோ ஒரு நாயகன் உச்சா போனதைப் போலத்தான் போகிறார்கள்.

எல்லோருமே ஒட்டுமொத்தமாக தென்னிந்திய சினிமாவின் தாக்கத்தில் சிக்குண்டு இருந்தாலும், பழி சுமப்பதென்னவோ பாவப் பட்ட பெண்கள்தான். நடிகை களை பார்த்து கட்டை, குட்டை உடையணிகிறார்கள், தலையை சீவிச்சிலுப்பி விட்டுக் கொள் கிறார்கள், மாறுவேசமா மேக்கப்பா என்பது தெரியாத அளவில் பேஷியல் போட்டுக் கொள் கிறார்கள், சினிமாவில் வரும் செகண்ட் ஹீரோயின் மாதிரி அடிக்கடி 'ஆளை' மாற்றிக் கொள் கிறார்கள். (அதிலும் பாருங்கள், ஹீரோயின் ஆளை மாற்றாத 'அசல் பெண்'ணாக இருப்பார்)

பொதுவாக இப்படித்தான் பெண்களைப்பற்றி நமது ஆண் களிடம் அப்பிராயம் உள்ளது. அடுத்த படத்திற்காகஞ் அடுத்த ஸ்ரைலிற்காக பெண்கள் காத்திருக் கிறார்கள். சினிமா நாயகிகளை பெண்கள் தமது வாழ்க்கையின் முன்மாதிரியாக கொள்கிறார்கள் என அவர்கள் நினைக்கிறார்கள். அதனால்த்தான் 'அவளொரு சிலுக்கு' என்பது மாதிரியான உதாரணங்களை நமது ஆண்கள் பாவிக்கிறார்கள்.

இப்படி குற்றம்சாட்டப்படும் பெண்களெல்லோரும் யார்? கதிர் காம யாத்திரைக்கு செல்வதைப் போலவிஜய்படத்தின் முதற்காட்சிக் காக காலையிலேயே சென்று றோட்டுக்கரையில் படுப்பவனின், அஜித் கட்அவுட்டிற்கு பாலா பிசேகம் செய்பவனின், ரஜினியின் பிறந்தநாளில் கேக் வெட்டுபவனின் வீட்டுப் பெண்கள்தானே அவர்கள். அவர்கள் அனுஷ்கா ஸ்ரைலிற்கு போகாமல் ஆங்சான் சுகியாகவா மாறுவார்கள்?

பெண்களை குறைசொல்லும் ஆண்கள் மட்டும், விஜய் ஐஸ்லாந்தில் போட்டு டுயட் பாடிய சுவைற்றர் ரீசட்டை நமது நாட்டின் வேகாத வெய்யிலுக்குள்ளும் போட்டு 'பாண் போறணை'க்குள் நுழைந்தவனைப் போல எதற்காக அவதிப்பட்டுக் கொண்டு திரிகிறீர்கள்?

அதர்வா ஸ்ரைல், ஆர்யா ஸ்ரைல் என்று தலைமுடியை முள்ளம் பன்றிகளை போல கோதிவிட்டுக் கொண்டு வெளியில் வந்து மற்றவர்களை எதற்காக மிரட்டுகிறீர்கள்?

ஒருநடிகனிற்கு நன்றாக இருந்தால் தாடி வைக்கச் சொல்வார்கள். அவனது தோற்றத்திற்கு எது நன்றாக இருக்குமோ அதை வைத்துக் கொள்வான். ஆனால் நம்மவர்கள் அஞ்சான் ஸ்ரைல், மாஸ் ஸ்ரைல் என வைத்துக் கொள்ளும் தாடியை பார்க்கும்போது ஜீன்ஸ் போட்ட கொரில்லாக்கள் போலல்லவா இருக்கிறது.

கானமயில் ஆட கண்டிருந்த வான்கோழியும் ஆடுவதைப் போல சில பெண்கள் நடிகைகளை பின்பற்றியே வாழ்கிறார்கள்தான். லட்சலட்சமாக சம்பளம் வாங்கும் படத்திற்காக ஒருநாளோ, ஒரு மணித்தியாலமோ நடக்கும் சூட்டிங்கிற்காக அவர்கள் மினைக் கெட்டு மேக்அப் செய்கிறார்கள். அதைப் பார்த்துவிட்டு, நாளாந்தம் ஆயிரக்கணக்கில் செலவிட்டு மேக்அப் செய்தபடி வந்து 'மிரட்டும்' பெண்களை மட்டும் குறை சொல்பவர்கள், ஏன் ஆண்களை குறை காண்பதில்லை யென்பதுதான் நமது கேள்வி.

பெண்கள் ஏடாகூடமாக ஆடையணிகிறார்கள், ஆபாசமாக திரிகிறாள் என கவலைப்படும் கலாசார காவலர்கள் ஒன்றை நினைக்கத் தவறுவதில்லை. பாதி பிருஸ்டம் தெரிய ஜீன்ஸ் அணியும் ஒருவனின் தங்கையோ, அக்கா வோதானே அவள். பெண்கள் அங்கம் தெரிய ஆடையணி கிறார்கள் என வழக்குத் தொடுத்து, தீர்ப்பும் வழங்க மேடையேறிய பெரியவர்களே, உங்கள் ஜீன்ஸ் பிருஸ்டத்திற்கு கீழ் இறங்கி நிற்கிறது, உங்களின் பின்னால் நிற்கும் ஒருத்தி முகத்தை சுழித்துக் கொண்டு நிற்கிறாள் என்பதைத்தான் சொல்ல முடியும்.

ஆண்கள், பெண்கள் என்ற வித்தியாசங்கள் இல்லாமல் தென்னிந்திய சினிமா கலாசாரம் எல்லோருக்குள்ளும் வேகமாக ஊறிவிட்டது. புடவைக்கடைகளில் அசலான பெயருடன் எந்த உடை விற்பனையில் உள்ளது? எல்லாமுமே படங்கள், நடிகர், நடிகைகளின் பெயரில்த்தானே உள்ளது.

இதில் பெண்களை மட்டும் ஏன் குறை சொல்வான்? இந்த பொருட் களையெல்லாம் விற்று காசாக்கும் உத்தி ஆண்களிற்குத்தானே தெரிந்தி ருக்கிறது. ஆகவே, இதில் ஆண்களா, பெண்களா அதிகம் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற வில்லங்க வாதங்களை விட்டுவிட்டு, நமக்கான அடையாளங்களை கண்டடைய வழிகளுண்டா என்பதை கண்டுபிடிப்பதுதான் முறையானது.

இதற்கு முதலில் நம்மவர்களின் மனநிலையை மாற்ற வேண்டும். ஆய் போனாலும் ஆர்யா மாதிரித் தான் போவேன் என்றோ, சட்டை போட்டாலும் சமந்தா மாதிரித் தான் போடவேன் என்றோ அடம் பிடிப்பதெல்லாம் சின்னப் பிள்ளைத்தனங்கள் என்பதை அவர் களிற்கு புரிய வைக்க வேண்டும்.

நாமும் நமக்கென்று நலியாக் கலைகளையுடையவர்கள் என்ப தையும், நமது சந்ததிக்கான முன் னோடிகளாக நாமேயிருப்போம் என்பதையும் ஒவ்வொருவரும் உறுதி செய்து கொள்வோம். ●

---

பாலை இரவில் அருந்தி வாருங்கள்.

**ரமணி (30)**
**வரணி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** இரவில் நித்திரை குறைவு. உடல் வலி. எழுந்து வேலை செய்ய முடிவதில்லை. ஓரே சோர்வாக இருக்கிறது. சிகிச்சைபெற்றேன். இரத்தப்பரிசோதனை செய்தத தில் ஹீமோகுளோபின் 9 ஆக இருக்கிறது, அது குறைவு என்றார்கள். இரும்புசத்து பாணி தந்தார்கள். இப்போதும் அதிகளவு முன்னேற்றமில்லை. இயற்கை மருத்துவம் சொல்வீர்களா?

**பதில்:** நமது உடலில் ஹீமோகு ளோபின் குறையும் பொழுது அந்த அணுக்கள் குறைந்த ரத்தம் உடல் முழுவதும் உற்சாகமாக ஓட முடிவதில்லை. உடலின் பாகங்கள் சுறுசுறுப்பாக இயங்க முடிவதில்லை. ரத்தத்தில் ஆண்களுக்கு ஹீமோகு ளோபின் 14 18 கிராம் அளவிலும், பெண்களுக்கு 12 16 கிராம் அள விலும். இருக்கவேண்டும். ஹீமோ குளோபின் குறைவாக இருத்தல் இரத்தசோகை எனப்படும். ஆணை விட பெண்ணுக்கு இரத்தசோகை தொந்தரவு அதிகம் வரும் வாய்ப்பு உண்டு. மாதம் தோறும் மாதவிடாயில் ஏற்படும் இழப்பு, குழந்தை உண்டாயிருக்கும் போது, பாலூட்டும் போது என பெண்ணிற் கான பிரத்யோக பணியிலேயே அதிக இரும்புசத்து இழப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

இவைதவிர ஊட்டசத்து குறைந்த உணவு இரத்த சோகைக்கு மிக முக்கிய காரணம். மூல நோயில் ஏற்படும் இரத்த இழப்பு, சிறுநீரக நோய்கள், ஈரல் நோய்கள், வயிற்றுப் பூச்சிகள், இரத்த சோகை ஏற்படக் கூடும். கீரை, சிறுகீரை, முருங்கை, அகத்தி, பசலை, தண்டுக்கீரை, பொன்னாங்கண்ணி வல்லாரை என கிடைக்கும் எல்லா கீரைகளிலும் இரும்பு சத்து அதிகம் உண்டு. எனவே கீரைவகைகளை அதிகம் சாப்பிடுங்கள்.

முந்திரிகை வற்றல் பாலுடன் கலந்து சாப்பிடலாம். பேரிசம்பழம் இரத்த சோகை நீக்க உதவும். இதைவிட யவனபிரகாசலேகியம், அயரசாயனம் போன்ற ஆயுர்வேத மருந்துகளை பாவிப்பதன் மூலம் இரத்தசோகை நீங்கி குணம் பெறலாம்.

**நிர்மலா, (29)**
**இருபாலை, யாழ்ப்பாணம்**

**கேள்வி:** 6 மாதம் கர்ப்பமாய் இருகிறேன். குங்குமப்பூ சாப்பிட் டால் குழந்தை சிவப்பாய் பிறக்கும் என்கிறார்கள். நான் குங்குமப்பூ சாப்பிடலாமா?

**பதில்:** கர்ப்பிணிப் பெண்கள் குங்குமப்பூ சாப்பிட்டு வந்தால் குழந்தை சிவப்பாக பிறக்கும் என் பது வெறும் நம்பிக்கை மட்டுமே. தாய் தகப்பனின் நிறமூர்தங்களே பிள்ளையின் நிறத்தை தீர்மானிக் கிறது.

கர்ப்பம் தரித்துள்ள பெண்கள் காய்ச்சிய பாலில் குங்குமப்பூவை இட்டு அருந்தி வந்தால் அது தன் னுள்ளே கொண்டிருக்கும் ஊட்ட சத்துகளால் தாய்க்கு நலமளிக்கிறது.

அதோடு பெண்களின் மாத விலக்கு வலியைப் போக்கும் குணமும் குங்குமப்பூவிற்கு உண்டு. இது கருப்பைக்கு பலமும் தருகிறது. ஆனால் தற்போது யாழ்ப்பாணத் தில் தரமான குங்குமப்பூ கிடைப் பதில்லை. போலிகளே கடைகளில் கிடைக்கின்றன. அனுபவமுள்ள வைத்தியர் உதவியுடன் நீங்கள் வேண்டும் குங்குமபூவின் தரத்தை பரிசோதித்த பின் பாவியுங்கள். போலியான குங்குமப்பூ உடல் நலத் தை பாதிக்கவும் இடமுண்டு. ●

எண் சோதிடம்

# அதிர்ஷ்ட விஞ்ஞானம் தரும் வாழ்வு முன்னேற்றங்கள்



சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392

**எண்:09 (செவ்வாய்)**

இதுவரை பார்த்த எட்டு எண்களின் குணாம்சங்களை விட காணி, பூமி, மனை, கட்டிடம், தொழில்நுட்பம், மற்றும் பொறியியல், போர் உபாயம் போன்றவற்றைத் தர வல்லதான 9 எண் பற்றிப் பார்ப்போம். மிகவும் சக்திவாய்ந்த எண் ஆகும். சிவன், பார்வதி, விநாயகர், சுப்பிரமணியர் குடும்பத்தையும் மற்றும் காவல் தெய்வம் வைரவர் பெருமானையும், உள்ளடக்கும் பெரும் சக்தி கொண்டது என்று கூறலாம். அழிக்க முடியாதது என்றும் அழைக்கலாம். நம் முன்னோர்கள் கைவிரல்களினால் கணிதத்தை எண்ணிக் கணக்கிட்டுக் கொண்டனர். இதனால் 10க்கு மேல் எண்ண முடியாது என்பதை உணர்ந்து கொண்டனர். எண்களையும் எழுத்துக்களையும் திரும்பத் திரும்ப ஆராய்ந்து கடைசி எண்ணாக இதை வைக்கலாம் என்ற முடிவிற்கு வந்தனர். கூட்டல், பெருக்கல் இரண்டிற்கும் ஒத்ததாக 9 எண் இருப்பதனை அறிந்தனர். இந்த 9 எண்ணுடன் எந்த எண்ணைக் கூட்டினாலும் கூட்டப்பட்ட எண் முடிவில் அதன் பலம் மாறாமல் இருப்பதனை தெரிந்து கொண்டனர். உதாரணம் 9 உடன் 7 ஐக் கூட்டினால் 16 வருகின்றது. 1+6=7 வருகின்றது. கூட்டப்பட்ட எண் 7 அதன் தன்மையை இழக்கவில்லை. இதே போன்று 9ஐ 5ஆல் பெருக்கினால் 9X5=45 வரும். 4+5=9 வருகின்றது. எனவே 9 தன் அம்சம் இழக்காமல் உள்ளது. இதன் மூலம் அஸ்திவாரம் மாறாமலும், உறுதியாகவும் உள்ளதனை அறிவோம். நாம் கட்டும் வீட்டிற்கு அஸ்திவாரம் உறுதியாக அமைய வேண்டும் என்பதனையே நாம் விரும்புவோம். உறுதியாக அமையாவிடின் கீழ் மாடியும் உருக்குலைந்து விடும், மேல் மாடியும் உருக்குலைந்து போகும். 9, 18, 27 திகதிகளில் பிறப்பவர்கள் எல்லோரும் இந்த எண்ணின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களாவார். இதை விட திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டும் போது 9 வருபவர்களும் இந்த எண்ணின் ஆதிக்கத்திற்கு உட்படுவார்.

**பொதுவான குணாம்சங்கள்.**

வாழ்க்கையை போராட்டமாகக் கருதி வாழ்க்கைப் பயணத்தை தொடரும் நிலை ஏற்படும். அறிவு, ஆற்றல் மிகுந்தவர்கள் மனப் போராட்டம் பெறுவார். ஏனையோர் கள்ளம், கபடம், சூழ்ச்சி கொண்டு விவாதித்தல், தர்க்கித்தல், சச்சரவு நிலையில் வாழ்க்கையை கழிப்பார். தேசம், சமூகம் என சேவை செய்யும் ஆர்வத்தை இவ் எண் தரும். தன் எண்ணப்படியே நடக்க விரும்புவார். அதற்குத் தடையேதும் ஏற்பட்டால் தாங்கிக் கொள்ள மாட்டார். எதிரியின் பலத்தை எப்பொழுதும் சிந்தனையில் கொண்டு ஆராய்வார். இதன் மூலம் இராஜதந்திர ரீதியிலான அணுகுமுறையைக் கையாள்வார். சந்தர்ப்பம், சூழ்நிலைகளுக்காக காத்திருந்து தமது கருமங்களை முன்னெடுத்து வெற்றி காண்பார்.

**"ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவு வாடியிருக்குமாம் கொக்கு"**

என்ற முதுமொழி இந்த எண்காரர்களுக்கு மிகப் பொருந்தும். இந்த எண் ஆதிக்கம் நன்றாய் அமையின் கூர்மையான நல்ல அறிவையும், வளைந்து கொடுக்கும் தன்மையையும் கொடுக்கும். எண் ஆதிக்கம் பலமிழந்தால் தீய குணங்களும், முரட்டுச் சுபாவமும் தரும். அறிவால் மற்றவர்களை வெற்றி கொள்ளவும், ஆயுதத்தால் மற்றவர்களைக் கொல்லவும் இந்த எண் பலத்தை கொடுக்கும். இந்த எண் ஆதிக்கர்களில் சிலர் நல்ல அறிவாளிகளாக எதையும் மிகப் பொறுமையுடன் சிந்தித்து ஆராய்ந்து சாமர்த்தியம் கொண்டு நடப்பார். இன்னும் சிலர் கோபதாபம், பகை, மூர்க்கம், வீரம் கொண்டு நடப்பார். நல்ல ஆராய்ச்சியாளர்கள் நல்ல தத்துவ ஞானிகள் எல்லோரும் இந்த எண் ஆதிக்கம் கொண்டிருப்பதைப் பார்க்க முடியும். தளராத மன உறுதி, போராடும் சக்தி நிலை, கண்டுபிடிப்புக்கள், இரசாயனம், வைத்தியம், சத்திர சிகிச்சைகள் மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்படுவார். சிலருக்கு நல்ல தெய்வீக பலம் பொருந்தி அபூர்வமான சக்தியுடன் காணப்படுவார். இவர்களது குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு, செய் தொழில் வாழ்வு போராட்டம் போன்றே அமையப்பெறும். பல ஆபத்துக்கள், அதிர்ச்சிகள் வந்து விலகும். நல்ல பணிகளில் ஈடுபட்டால் ஊக்கம் பெறுவர், புகழ் பெறுவர். இவர்களைச் சுற்றி வஞ்சகர்களும், ஏமாற்றுபவர்களும் காணப்படுவர். அறிவு எனும் தீபம் தாங்குவர். காலின் கீழ் இருக்கும் பாம்பை அறியார். இரத்தக்கறை படிந்த வாழ்வுப் பாதையில் தனித்துக் காணப்படுவர். நிதானம் இழக்காமல் இருந்தால் வாழ்வில் வெற்றி பெறுவார். இவர்களில் அனேகமானவர்களுக்கு வாழ்க்கையின் ஆரம்பம் கஸ்டம் நிறைந்ததாக அமையும். தோல்வி கண்டு கலங்க மாட்டார். எவ்வளவு கஸ்டம் வரினும் தாங்கிக் கொள்ளும் சக்தி கிட்டும். ஆதிக்கம் பலம் நிறைந்தால் மனதில் உற்சாகம், முண்டியடித்து முன்னேறுதல், சிரித்த முகம், சாமர்த்தியம் அமையும். ஆதிக்கம் குறைவாயின் கட்டுக்கடங்குதல், உற்சாகம் குறைந்து காணப்படுதல், ஒதுங்குதல் போன்ற சுபாவம் அமையும். மனம் விரும்பிய நண்பர்களுக்கு எல்லா உதவிகளும் செய்வார்கள். கடும் பாதிப்பு அதிகமாயின் நடத்தைப் பிறழ்வுகளுடன் தன் சுகம் கருதி சில சமயம் மிருகசுபாவங்களையும் மனதில் கொண்டிருப்பார். இவர்களுக்கு அபூர்வமான கனவுகள் மூலம் திருவருள் வளரும். இவர்களில் பெரும்பாலானோர் இராமர், காளி, அனுமன், வீரபத்திரர், வைரவர், சுப்பிரமணியர் தெய்வங்களையே உள் அன்புடன் வழிபடுவார்.

**உடலமைப்பு.**

இவர்கள் பொதுவாக நடுத்தர உயரமானவர்களாகவே காணப்படுவார். நல்ல திடகாத்திரமான தேகக் கட்டு இருக்கும். உடல் உழைப்பை விரும்புவர். ஆண்களாயின் நல்ல மார்பு, தோள்கள், சதைப்பிடிப்பு என்பன அமையும். பெண்களில் சிலருக்கு மட்டும் இவை இருக்கும். ஏனையவர்கள் மெலிந்த தோற்றம் மற்றும் சோம்பல் தன்மை நிரம்பியவர்களாக இருப்பார். பற்கள் சிறிது நீண்டு இருக்கும். நல்ல நிமிர்ந்த பார்வை நிமிர்ந்த நடை பார்வைக்கு சிறிது பலசாலிகளாக கவர்ச்சி தரும்.

**நோய்.**

தேகம் உஷ்ணத்துடன் இருக்கும். இதனால் இரத்தம் கொதிப்படையும். இது சம்பந்தப்படும் நோய்கள் எளிதில் பற்றி விடும். வயிற்றில் ஏதாவது குழப்பம் இருக்கும். உடம்பில் ஏதாவது ஒரு பகுதியில் காயம், தழும்பு இருக்கப் பெறுவார். ஓப்பரேசன் ஒரு தடவையோ அல்லது பல தடவையே ஏற்படலாம். நெருப்புக்காயம், விபத்து என்பனவும் ஏற்படலாம். இதைவிட அல்சர், கான்சர், மூலம் சார்ந்த வியாதிகளும் ஒரு சிலரைப் பாதிக்கும். முன்சொன்ன நோய்களுக்கு வைத்தியரிடம் சிகிச்சை பெறும் அதே நேரம் நாளாந்த கைமருந்தாக வெங்காயம், வெள்ளைப்பூண்டு, புளிக்கீரை, கரணைக்கிழங்கு, வெண்டிக்காய், மற்றும் சேப்பங்கிழங்கு என்பவற்றை உணவில் சேர்ப்பது நன்மை பயக்கும். இதைவிட நல்ல பழவகைகளை உணவில் சேர்க்க வேண்டும். இந்த எண்காரர்கள் நல்லெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வது மிக மிக முக்கியம்.

**பிறப்பு எண்கள் தருபவை.**

**பிறந்த திகதி:09**

செயற்கரிய செயல்களை ஆர்வத்தோடு செய்வார். நல்ல சாமர்த்திய தந்திரமான மூளை உள்ளவராய் இருப்பார். நல்ல கொள்கை இலட்சியம் கொண்டு வாழ்ந்தால் வளமுள்ள வாழ்வு கிடைக்கும். எதிரி, பகையாளிகளை சாதுரியமாக வெற்றி கொள்வார்.

**பிறந்த திகதி:18**

சுயநலம்விட்டுபொதுநலத்துடன் வாழ்வதற்கு முயற்சிப்பார்களாயின் பல நன்மைகளையும் பெறுவார். பிரச்சனைகளை ஆராய்ந்து பார்க்காமல் தலையிட்டால் பலவிதமான சிக்கல்களை சந்திக்க வைக்கும். எனவே கோபம், பிடிவாதம் இவற்றை இவர்கள் குறைக்க வேண்டும். காதல் வாழ்வில் சிலர் தோல்வி அடைவார். எளிதில் தீவிரப்படுவார். உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவது கஸ்டமாகும்.

**பிறந்த திகதி:27**

நல்ல காரியங்களில் ஈடுபட்டு நல்ல பலன்களை அனுபவிப்பார். மனதில் எண்ணியவை கைகூடும். இவர்களின் புத்திக்கூர்மை வெற்றி தரும். சாந்தமான குணம் கூடுதலாய் அமையும். எந்தவொரு



**9 எண் மிகவும் சக்திவாய்ந்த எண் ஆகும். சிவன், பார்வதி, விநாயகர், சுப்பிரமணியர் குடும்பத்தையும் மற்றும் காவல் தெய்வம் வைரவர் பெருமானையும், உள்ளடக்கும் பெரும் சக்தி கொண்டது என்று கூறலாம்.**

விடயத்தையும் நன்கு ஆராய்வார். நல்ல யோசனைகள் கூறுவார். நல்ல உழைப்பாளிகள்.

**பெயர் எண்கள் தருபவை.**
**பெயர் எண்:09**

அறிவு, ஆற்றல் கொடுக்கும். நீண்ட பிரயாணங்கள் செய்ய வைக்கும். அறவழிப்போராட்டம், எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் என்பவை செய்ய வைக்கும். இறுதியில் வெற்றி பெறுவார். எதிரிகள் பகையாளிகளை வெற்றி கொள்வார். எல்லாத் தடைகளையும் தகர்த்து எறிந்து வாழ்க்கையை சுகமாகவும், நீடித்த ஆயுளுடனும் இருக்கச் செய்யும்.

**பெயர் எண்:18**

தெய்வ அருட்கடாட்சம் மிகவும் குறைவாக அமையும். கஸ்டங்களையும், காரியங்களுக்கு வீணான தாமதங்களையும், சூழ்ச்சிகளையும், ஆபத்தான எதிரி பகையாளிகளையும், தோன்ற வைக்கும். சில வேளைகளில் சிலர் சமூக விரோதமான பாரியங்களில் ஈடுபட்டு துன்பப்படுவார். சுயநலம் முந்திக்கொள்ளும். அருளும் இல்லை, அமைதியும் இல்லை ஆசைகள் அதிகமாகி தெய்வீகத்தை அழியச்செய்யும். 18 ஆம் நாள் பாரத யுத்தம், 18 ஆம் அத்தியாயம் கொண்ட பகவத்கீதை, 18 ஆம் நூற்றாண்டின் போர், 18 படி ஐயப்ப வணக்கம் எல்லாவற்றையும் உணர்த்தும்.

**பெயர் எண்:27**

தெளிவான அறிவு, இடைவிடாத உழைப்பு, செல்வ விருத்தி, செல்வம், செல்வாக்கு, புகழ், அதிகார பதவி என்பவற்றை இவ் எண் குறிக்கின்றது. செய்யும் தொழிலில் சிறந்தவராக மதிக்கப்படுவார். பரோபகரமான செயல்களில் ஈடுபட வைக்கும். கருமங்களில் எவை நல்லது, கெட்டது என ஆராய்ந்து முடிவெடுப்பார். மந்திரம், தந்திரம், ஆன்மீகம் என்பன கிடைக்கும். பாதுகாப்புத் துறையாயின் நல்ல உச்சம் பெறுவார்.

**பெயர் எண்:36**

இவ் எண் மிகச் சாதாரண நிலையில் உள்ளவரைக்கூட பிரசித்தராக்கி நல்ல சீமானாக்கி வைக்கும். பிறந்த இடத்தை விட புகுந்த இடம், வாழ்கின்ற இடம், தொலை தூர இடம் என்பவற்றிலே மதிப்பும் புகழும் பெறுவார். அனேக பயணங்கள் செய்ய வைக்கும். உயர் பதவிகளில் அமரச் செய்யும். அதிர்ஸ்டகரமான எண்ணாகும். எனினும் குடும்ப வாழ்வில் சில சிக்கல்களை சந்திக்கச் செய்து பின் நிவர்த்தியாக்கும்.

**பெயர் எண்: 45**

தனது வாக்குச்சாதுரியத்தால் மதிப்புப் புகழ் பெறுவர். கஸ்ரங்களை முதலிலும் புகழ், பெருமை, சந்தோசம் என்பவற்றைப் பின்னுக்கும் கொடுக்கும். செய்யும் கருமங்கள் ஊடாக எல்லோரையும் திருப்திப்படுத்துவர். தீவிர உழைப்பாளிகளாய் இருப்பர். இந்த எண் கொண்டோர் தாங்கள் செய்யும் தொழிலில் நல்ல புகழ் பெறும் பதவியை வகிப்பர். எந்த இடர்வரினும் தனது கருமத்தை வெற்றிகரமாக முடிப்பர். அமைதி, அடக்கம், பரிவு என்பன இவர்களது சுக வாழ்விற்கு வழிசமைக்கும். நோய்ப் பிணிகள் விரைவாக நீங்கி விடும். இது விரும்பத்தக்க எண்ணாகும்.

**பெயர் எண்:54**

இவர்கள் தங்களது வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறுவர். தோல்வி வெற்றி மாறி மாறிக் காணப்படும். வாழ்வின் முற்பகுதி நன்றாயும் பிற்பகுதி மந்தமாயும் பலன்கள் காட்டும். பிடிவாதமும் முன் யோசனையற்ற செயல்களாலும் பாதிப்புப் பெறுவர். “பேராசை பெரும் தரித்திரம்” இதை உணர்ந்தால் மிக நல்லது. எச்சரிக்கையாகச் செயற்படுவார்களாயின் பொருள் இழப்புக்கள் இருக்காது.

**பெயர் எண்:63**

இதுவும் ஒரு அதிர்ஸ்டகரமானதாகும். தவறான காரியங்களில் ஈடுபடாமல் நல்ல காரியங்களில் ஈடுபட்டால் பெரு வெற்றி உண்டு. தவறான தீமையான, கெடுதலான செயல்களில் ஈடுபடவும், செய்யத் தூண்டவும் செய்யும், திருடர்களுக்கு இந்த எண் பொருந்தி உள்ளது.

**பெயர் எண்:72**

இதையும் ஒரு சிறந்த எண் என்றே கூறலாம். அதமம், மத்திமம், உத்தமம், மிகச்சிறப்பு என வாழ்வில் முன்னேற்றம் சுகம் என்பன கூடும். பலவிதமாக அசையும் அசையாத சொத்துக்களை கொண்டிருப்பார் பரம்பரையும் ஆளக்கூடிய சொத்துக்களைச் சேர்ப்பார். பணம் வந்து கொண்டே இருக்கும். வியாபார முயற்சியாளர்களுக்கு இவ் எண் செல்வம், சேமிப்பு, சிறப்பு, புகழ் கொடுக்கும்.

**பெயர் எண்:81**

முன்னேற்றகரமான எண் ஆகும். நல்ல புகழ், செல்வம், சேமிப்பு என்பவற்றைக் குறிக்கும். எந்தவொரு கருமத்தையும் எச்சரிக்கையாக இறை சிரத்தையுடன் செயற்படுத்த வேண்டும். இல்லையேல் அதிர்ஸ்டம் பாதிக்கப்படும். இவ் எண்ணுடையோர். ஆசிரியர், போதனாசிரியர், விரிவுரையாளர் பதவிகளில் அமர்வதற்குப் பலன் தரும்.

**பெயர் எண்:90**

பூரணமான நற்பலன் உண்டு நல்ல முயற்சியாளராய் அமைய வேண்டும். வெற்றிகள் கிட்டும், குபேரன் என போற்றும் படி வாழ்வார். புகழ், பெருமை சேரும். தெய்வ நம்பிக்கை வேண்டும். தானம், தர்மம் செய்வதில் நாட்டமும் இருக்கும்.

**பெயர் எண்:99**

இது விரும்பத்தக்க ஒரு எண்ணாக இல்லை தவறாக வழிகளில் ஈடுபடச் செய்யும். எதிரிகள் பகையாளிகள் அதிகம் உண்டு எனினும் கல்விச் சிறப்பு குறையாது. செய்தொழில் சிறப்பு அளவாக அமையும்.

**பெயர் எண்:108**

நல்ல தொழில், நல்ல மதிப்பு நல்ல சித்தி என்பன தரும். எண்ணிய கருமம் நிறைவேறும். முயற்சிக்கேற்ற பலன்களை அனுபவிப்பார். கால் நடையாக முயற்சிகளில் ஈடுபடுவார். சைக்கிளில் பல மைல் தூரம் செல்வார்.

**தொழில்.**

வாகனம், இயந்திரம், மின்சாரம், தொழில்நுட்பம், சத்திரசிகிச்சை, பாதுகாப்புப் படைப்பிரிவு, மற்றும் பொறியியல் என்பவை நல்ல பொருத்தம்.

**அதிர்ஸ்ட நாட்கள்.**

9,18,27,05,14,23,21,30,06,24 திகதி கொண்ட நாட்களாகும். இதை விட 1 எண் வரும திகதிகளும் நன்மை.

**துர் அதிர்ஸ்ட நாட்கள்.**

2,11,20,29 திகதி கொண்ட நாட்களாகும்.

**வர்ணம்.**

சிவப்பு மிக நல்லது. நீலமும் பொருந்திக் காணப்படும். வெளிர் பச்சை, வெள்ளை கலந்த ஏனைய நிறங்கள் பொருந்தாதவை.

**இரத்தினம்.**

பவளக்கல் அதிர்ஸ்டம் தரும் அதை விட பிளட் ஸ்ரோன் (Blood stone) எனச் சொல்லப்படும் சிவப்பு புள்ளிகள் சேர்ந்துள்ள பச்சை நிறக் கற்களும் நன்மையானவை.

ஆங்கில எழுத்து இவ் எண்களுக்கு இல்லை. காரணம் சப்தங்களின் சேர்க்கையையும், முடிவையுமே இவ் எண் குறிப்பதால் ஆகும்.



# ஆண்களுக்கான ஆடைத் தெரிவுகள்

திவாகரன்
thivaharan07@gmail.com

ஸ்டைலாக ஆடைகள் அணிவதிலும், தம்மை அழகுபடுத்திக் கொள்வதிலும் இன்று பெண்களுக்கு இணையாக ஆண்களும் தங்களின் ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றனர். காலத்திற்கும், கால நிலைக்கும், ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் ஏற்றால் போல் ஆடைகளின் வகைகளை மாற்றிக்கொள்கின்றனர். அந்தவகையில், தற்போது 90 வீதமான ஆண்கள் டெனிம் மற்றும் ஷோக்கோ ஜீன்ஸ்களையே அதிகம் விரும்பி அணிகின்றனர்.

வெறுமனே ஜீன்ஸ் மட்டும் ஒருவரை ஸ்டைலாகக் காட்டி விடாது, ஜுன்ஸ்க்கும், அவரவர் உடலமைப்புக்கும், நிறத்திற்கும் ஏற்றால் போல் மேலாடைகளை அணியவேண்டும். மொடல் சேட், பிராண்டட் சேட், கொலர் வைத்த ரிசேட், வைக்காத ரீசேட், வட்ட வடிவக் கழுத்து, “V” வடிவக் கழுத்து ரீசேட்கள் என மேலாடைகளும் வெவ்வேறு வகைகளில் உள்ளன. ஆனால், அவற்றில் பொருத்தமானதை தெரிவுசெய்வதில்தான் பலருக்கு குழப்பம்.

இதோ இதோ உங்களுக்கு பொருத்தமானதை இலகுவாக தெரிவுசெய்ய சில டிப்ஸ்..



1. டெனிம் ஜீன்ஸ் அணிந்தால் அதற்கு பெரும்பாலும் ரீசேட்கள் தான் எடுப்பாக இருக்கும். ஷோக்கோ ஜீன்ஸ்க்கு சேட் அணியலாம்.
2. ஒல்லியானவர்களும், குண்டானவர்களும் டெனிம் ஜீன்ஸ் அணியலாம். உடலோடு ஒட்டியவாறு சற்று இறுக்கமாக அணிந்தால் அழகாக இருக்கும்.
3. அனைத்து இடங்களிற்கும் அணியக் கூடியதான, கடுமையான வேலைகளின் போது நீல நிற டெனிம்ஸ் அணியக் கூடியது.
4. சாதாரணமாக ஒரு இடத்திற்கு அணிந்து செல்வதற்கு மெல்லிய ஃபேடட் (Faded) டெனிம் ஜீன்ஸ் மிகவும் பொருத்தமானது. ஷேர்ட் அல்லது ரீ ஷேர்ட் இதற்குப் பொருத்தமானதாக இருக்கும்.
5. வெளுறிய நிறத்திலான டேர்ட்டி டெனிம் (Dirty Denim) டெனிம் இளைஞர்கள் சாதாரணமாக அணியக் கூடியது. விஷேட நிகழ்வுகளுக்கு இது அதிகம் பொருத்தமற்றது.
6. கறுப்பு மற்றும் வெள்ளை நிற டெனிம்கள் பொதுவாக நமது நாட்டிற்கு பொருத்தமற்றவை என்கிறார்கள் ஆடை வடிவமைப்பாளர்கள்.
7. மிகவும் ஒல்லியானவர்கள் இறுக்கமாக ரீசேட் அல்லது சேட் அணியாமல் சற்றுத் தளர்ந்த நிலையில் அணியவேண்டும். அப்போதுதான் அவர்களை சற்றுப் பொலிவானவர்களாக காட்டும்.
8. கட்டமைப்பான உடலமைப்பை கொண்டவர்கள் ரீசேட் அல்லது சேட் அணிந்தாலோ அவர்களின் உடலுன் ஒட்டியவாறு அணிந்தால், அவர்களின் அழகை அது இரட்டிப்பாக்கும்.
9. குண்டாக இருப்பவர்கள் சோக்கே அல்லது டெனிம் ஜீன்ஸ்க்கு மேலிருந்து கீழாக மெல்லிய கோடு போட்ட சேட் அணிந்தால் அது அவர்களை சற்று மெல்லியதாகக் காட்டும். ஒல்லியாக இருப்பவர்கள் பக்கவாட்டில் கோடு போட்ட சேட் அணிந்தால் அவர்களை கொஞ்சம் உடம்பாகக் காட்டும்.

யாழ்ப்பாணத்தை பொறுத்த வரையில் டெனிம் மற்றும் ஷோக்கோ ஜீனஸ்கள் 1500ரூபா தொடக்கம் 4000 ரூபா வரையும், ரீசேட்கள் 500ரூபா தொடக்கம் 1500 ரூபா வரையும், தரமான சேட் ஒவ்வொரு வகையும் 500 ரூபா தொடக்கம் 2000ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக யாழ்.நகரிலுள்ள ஆண்களுக்கான ஆடை விற்பனை நிலையத்தில் பணிபுரிபவர்கள் குறிப்பிட்டனர். மொடேன் சேட்கள்தான் இளைஞர்களை அதிகம் கவர்ந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.



# மார்பக புற்றுநோய்



வைத்தியகலாநிதி
ம.தக்ஷாயினி
உதவி சுகாதார வைத்திய அதிகாரி
சுகாதார வைத்திய அதிகாரி
பணிமனை நல்லூர்

மார்பக புற்றுநோய் ஆண்கள் பெண்கள் இருபாலரையும் பாதிக்கின்றபோதும் பெண்களையே அதிகமாக பாதிக்கின்றது. இலங்கையில் பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களில் மார்பகப் புற்றுநோயே மிகப்பிரதானமாக இருக்கிறது.

இலங்கையில் ஒவ்வொரு நான்கு நாட்களுக்கும் ஒருமுறை ஒரு பெண் மார்பகப்புற்றுநோய் அல்லது கருப்பை, கழுத்து புற்றுநோயால் இறப்பதை அறிவீர்களா? எனவே மார்பகப் புற்றுநோயை பற்றி அனைத்த பெண்களும் அறிந்து கொள்வது அவசியமாகிறது.

**மார்பகப்புற்றுநோயை ஏற்படுத்தும் காரணிகள்**

பரம்பரையில் மார்பகப்புற்று நோய் இருந்திருந்தால் நெருங்கிய உறவினர்களிடையே மார்பகப்புற்று நோய் காணப்படுதல் மிக அதிக ளவில் ஈஸ்ரஜன் ஓமோன் சுரத்தல் மிகக்குறைந்த வயதில் (12வயதுக்குள் பு+ப்படைதல்)

கூடிய வயதில் மாதவிடாய் நிறுத்தம் (55 வயதுக்குப்பின்) ஏற்படுதல்...

பிந்திய வயதில் முதல் கர்ப்பம் (30 வயதுக்கு மேல்) தரித்தல்...



மாதவிடாய் நின்ற பின் ஈஸ்ரஜன் ஓமோன் மாத்திரைகளை உள்ளெடுத்தல்...

குழந்தை இல்லாதவர்கள்...

தாய்ப்பால் ஊட்டாதவர்கள்...

அதிக உடற்பருமன் உடையவர்கள்...

புகைத்தல், மதுபானம், அருந்தும் பழக்கமுடையவர்கள்...

அதிக கொழுப்புணவுகளை உட்கொள்பவர்கள்...

**நோய் அறிகுறிகள்**

மார்பகத்தில் நோவற்ற கட்டிகள் காணப்படுதல்

மார்பகத்தின் பருமன் அசாதாரணமாக அதிகரித்தல்

ஒரு மார்பகம் அசாதாரணமாக மறு மார்பகத்திலும் பதிவாக இருத்தல்

முலைக்கம்பிலிருந்து ஏதாவது ஒரு திரவம் அல்லது குருதிக்கசிவு ஏற்படுதல்

முலைக்காம்பு உருமாறியிருத்தல் அல்லது உள்வாங்கியிருத்தல்

மார்பகத் தோலில் குழிகள் காணப்படுதல்

மார்பகத் தோலில் சுருக்கங்கள் காணப்படுதல்

மார்பகத் தோல் தோடம்பழத் தோலில் உள்ளது போல் மாறுதல்

அக்குள் பகுதியில் நெறிகள் போடப்பட்டிருத்தல்

கையில் அசாதாரணமாக வீக்கங்கள் காணப்படுல்

உடல் மெலிந்து போதல்

பசி எடுக்காத தன்மை

இலகுவில் சோர்வு களைப் படைதல்

**பாதுகாப்புமுறைகள்**

உணவுப் பழக்கத்தில் மாற்றம் ஏற்படுத்தல்

அதிக எண்ணெய், கொழுப்பு உணவுகளை தவிர்த்தல்

ஒவ்வொரு மாதமும் சுய மார்புப் பரிசோதனை செய்தல்

உடற்பயிற்சி

தாய்பாலூட்டுதல்

உடற்பருமனை குறைத்தல்

எனவே 35வயதுக்கு மேறபட்ட பெண்கள் அனைவரும் தம்மை சுக வனிதையர் கிளினிக் (wel women clinic) ல் உங்களது குடும்பநல உத்தியேகத்தர் ஊடாக பதிவு செய்வதனால் மார்புப் பரிசோதனையை செய்து கொள்ள முடியும். மார்புப் பரிசோதனையை செய்யும் போது சந்தேகிக்கும் படியான மாற்றங்களேதும்காணப்படுமிடத்து அவர்கள் உங்களை வைத்திசாலைக்கு சிபாரிசு செய்வார்கள். இதனை தவிர சுய மார்புப் பரிசோதனையை நீங்கள் செய்வதனூடகவும் உங்களை நீங்களே பரிசோதித்துக்கொள்ள முடியும். இலகுவாக ஞாபகம் வைத்திருப்பதற்காக ஒவ்வொருமாதசுகயீனம்முடிந்தஒரு வாரத்தினுள் அல்லது மாதப்போக்கு நின்றவர்கள் மாதத்தின் குறித்த ஒருநாளில் குளிக்கும் போதோ/ கண்ணாடி முன் நின்றோ/ படுத்திருந்தவாறோ பரிசோக்கலாம். இதற்கு 10 தொடக்கம் 15 நிமிடங்கள் போதுமானது.

கண்ணாடி முன் நின்று கைகளை தொங்க விட்டபடியும், மேலே உயர்த்தியவாறும், இடுப்பில் கைவைத்தும் மார்பகங்களின் பின் வருனவற்றை கவனிக்க வேண்டும்.

இரு மார்புகளின் அளவும் சமனாக உள்ளதா?

மார்பகங்களின் வடிவம்;. உ+ம் பள்ளங்கள், வீக்கங்கள்

தோலின் தன்மை. உ+ம் நிறமாற்றம், தடிப்படைதல்

முலைக்காம்பின் நிலை. உ+ம்: உள்வாங்கப்பட்டிருத்தல், சாய்ந்திருத்தல், ஏதாவது திரவக்கசிவு.

அதன்பிறகு வலது கையை தலைக்கு மேல் உயர்த்தி வைத்தவாறு இடது கையின் 2ம், 3ம், 4ம் விரல்களின் தட்டையான உட்பகுதியால் வலது மார்பை பரிசோதிக்கவும். அவ்வாறே இடதுகையை தலைக்கு மேல் உயர்த்தி வைத்தவாறு வலது கையின் 2ம், 3ம், 4ம் விரல்களின் தட்டையான உட்பகுதியால் இடது மார்பை பரிசோதிக்கவும். இதனை நின்றவாறோ/ படுத்திருந்தவாறோ செய்யலாம்.

விரல்களினால் கிள்ளிச் சோதிக்க வேண்டாம். அப்போது சாதாரண மர்பகங்கள் கூட கட்டியுள்ளது போன்று தோற்றமளிக்கலாம்.

விரல்களின் தட்டையான பகுதியால் வெளிப்புறத்திலிருந்து முலைக்காம்பை நோக்கி வட்டவடிவில் சோதித்தல்.

**அக்குள் பகுதியையும் சோதித்தல்.**

முலைக்காம்பை பெருவிரலினாலும்சுட்டுவிரலினாலும்அழுத்தி ஏதாவது திரவக்கசிவு உள்ளதா என அவதானிக்கவும்.

ஏதாவது சந்தேகத்திற்கிடமாக உணர்ந்தால் குடும்பநல உத்தியோகத்தரை அல்லது நேரடியாக நாடவும்.

## ரசப்பொடி தயாரிப்பது எப்படி

இன்று பல வீடுகளில் ரசம் வைப்பதற்கு பொடி தயாரிக்கவே தெரியாத அம்மாமார் நிறைய. பூட் சிற்றியில் போய் ரசப்பொடி பைக்கற் வாங்கித்தான் ரசம் வைக்கப்படுகிறது. அல்லது, வீட்டில் ரசப்பொடி செய்து வைத்தால் பிள்ளைகள் கேட்பார்கள் ‘என்னம்மா நீங்க.. ரசம் வைக்க சொன்னால் சீரக சொதி வைத்திருக்கீங்க’ என்று. அந்தளவுக்கு அம்மாமாரின் பக்குவம் பறந்து விட்டது. ரசம் வைத்தா அகம் கமகமக்க வேணும். சுவை மூக்கை பிய்க்க வேணும். அதற்கு முதலில் ரசப்பொடி தயாரிக்க கற்றுக்கொள்ள வேணும்.

**தேவையான பொருட்கள்:** மிளகாய் வற்றல்200கிராம், மல்லி200கிராம், உழுத்தம் பருப்பு 20கிராம், கடலைப்பருப்பு 100கிராம், நற்சீரகம் 100 கிராம், துவரம் பருப்பு 50 கிராம், மிளகு 50 கிராம், மஞ்சள் 50 கிராம்


**செய்முறை:** எல்லாப் பொருட்களையும் தனித்தனியாக சுத்தம் செய்து கொள்ளவும். வாணலியைச் சூடாக்கி மிளகாயை தவிர மற்றயவற்றை மிதமான தீயில் சூடாக்கி எடுத்துக் கொள்ளவும். அவற்றுடன் மிளகாயையும் சேர்த்து திரித்துக் கொள்ளவும். ரசப்பொடி தயார். சுவையான ரசம் வைத்து பரிமாறிக் கொள்ளுங்கள்.



## நீத்துப்பெட்டி உறவு

குந்தில் உட்கார்ந்து அம்மம்மா பின்ன, இரண்டு வீட்டுக்கு கமகமக்க அம்மா பிட்டவிக்கும் காலம் மெல்லமெல்ல காணாமல் போகத் தொடங்குகிறது. அதனுடன் சேர்ந்து நீத்துப்பெட்டியும் காணாமல்போகத் தொடங்குகிறது.

இளம் பெண்களுக்கு என்றில்லை, இன்றய அம்மாக்கள் பலருக்கு நீத்துப்பெட்டி பின்னவும் தெரியாது அதில் பிட்டவித்தால் வரும் சுவையும் தெரியாது. ஒருசில கிராமங்களில் பிண்ணப்படும் நீத்து பெட்டிகள்தான் இன்று கடைகளிற்கு விற்பனைக்காக வருகிறது.



சோஸ் பானிலும், இட்லி சட்டியிலும் பைக்கற் கோதுமை மாவை குளிர்ந்த தண்ணீரில் பிசைந்து இரண்டு குத்து குத்தி தேங்காய் பூவை காட்டி அவித்தெடுத்தால் பிட்டு. இதுதான் இன்று பல வீடுகளிலும்.

அரிசிமாவுடன் கோதுமைமா சேர்த்து, சுடுநீர் விட்டு, பிட்டு பதத்திற்கு குழைத்து அதனை தட்டு பெட்டியில் கொட்டி குத்தி, தேங்காய் பூவை பரவலாக கலந்து நீத்து பெட்டியின் அடியில் போட்டு அதன் மேல் மாவையிட்டு பானையில் வைத்து அவித்து இறக்கும் பொழுது வரும் வாசம் இருக்கிறதே... அப்பப்பா. அதுவல்லோ சொர்க்கம்.

இப்படி அவித்து வைத்த பிட்டை முதலாவதாக சாப்பிடப் போகும் பிள்ளையிடம் அம்மா சொல்லுவா ‘நுனி பிட்டை கிள்ளி அடுப்பங்கரையில் வைத்து விட்டு சாப்பிடு. மாமாவுக்கு கூடாது’ என. சில விடயங்களை ஆராயக்கூடாது. அனுபவிக்க வேண்டுமென்பார்கள். அப்படியான ஒரு சங்கதிதான் இதுவும். மாமன், மச்சான் உறவே எட்டப்போய், அவர்களும் நாட்டு எல்லைகள் கடந்து வாழத் தொடங்கியுள்ள இந்தகாலத்தில் உறவுகளிற்கிடையிலான அன்பின் சங்கிலியை அறவிடாமல் பாதுகாத்த இந்த வழக்கங்கள் காலாவதியாகிவிட்டன.

# தலையாய பிரச்சனைகளும் தீர்வுகளும்





**திருமதி.ச.கார்த்திகாயினி,**
வின்னீஸ் லக்கி,
இந்தியன் பியூட்டிபார்லர்,
திருநெல்வேலி.

இறைவனின் படைப்பில் ஒவ்வொருவரும் அழகுதான். ஆனால் தான் அழகாக இல்லை என்கிற தாழ்வுமனப்பான்மை தான் பெரும்பாலானவர்களை ஆட்டிப்படைக்கிறது. அழகு என்பது வெளிப்புறத்தில் இல்லை. நம் அகத்தில் இருக்கிறது.

எல்லோராலும் அழகு நிலையம் செல்ல இயலாது. இயற்கையிலேயே ஏராளமான பொருட்கள் நமக்கு அழகையும், ஆரோக்கியத்தையும் அள்ளித்தர வல்லவை. எப்பொழுதுமே நமக்கு நமது நாட்டின் மூலிகை வகைகளும், இயற்கை அழகுசாதனங்களின் அருமை, பெருமைகளும் தெரிவதில்லை. அதே நம்நாட்டுப் பொருட்கள் மேல் நாட்டிற்குச் சென்று மூலிகைகள் கலந்த க்ரீமாகவோ, சோப்பாகவோ வரும் பொழுது போட்டிபோட்டுக் கொண்டு பணத்தைச் செலவழித்து வாங்குகிறோம்.

ஆனால் நீங்கள் புத்திசாலிகள் அல்லவா? செலவே இல்லாமல் அன்றாடம் சமையலறையில் உள்ள பொருட்களைக் கொண்டே அழகாக உங்களை அலங்கரிக்கலாம். அந்த இரகசியங்களை எல்லாம் இந்தப் பகுதியில் நான் உங்களுக்குக் கூறப்போகிறேன்.

**தலையாய பிரச்சனைகளும் தீர்வுகளும்.**

**பிரச்சனைகள்**

தலையை, தலைமுடியைப் பொறுத்தவரை ஆண், பெண் இருபாலருக்குமே நிறையப் பிரச்சனைகள் இருக்கின்றன. பேன், பொடுகு, நரைமுடி, பிசுபிசுப்பு, முடி கொட்டுதல், பிளவுபடுதல், இளவயதில் வழுக்கைவிழுதல் இப்படிப் பல. பொதுவாக வீட்டில் இருப்பவர்களைவிட வெளியில் அலைபவர்களைத்தான் இந்தப் பிரச்சினைகள் மிகவும் பாதிக்கிறது.

அவற்றை எப்படி தீர்க்கலாம்?

**பொடுகுத் தொல்லை :**

பக்டீரியாவால் தான் பொடுகுத் தொல்லை ஆரம்பிக்கிறது. முடியைச் சுற்றி பக்டீரியா அரித்துவிடுவதால் தோல் மேலெழுந்து வெளியே வருகிறது. பருக்கள் முகத்தில் வர தலைப் பொடுகும் ஒரு காரணம்.

**தீர்வு :**

ஒரு நாள் விட்டு ஒரு நாள் தலையை அலசவும். சிகைக்காய் அரைக்கும் பொழுது சிறிது வேப்பிலை, வெள்ளை மிளகு, வசம்பு சேர்த்து அரைத்தால் பொடுகுத் தொல்லையிலிருந்து தப்பிக்கலாம்.

வெள்ளைமிளகு இரண்டு டீஸ்பூன், பால் ஒரு கப்

இவற்றை அரைத்து தலையில் எண்ணெய்தடவி லேசாக மசாஜ் செய்யவும். இதனால் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். முடியை ஒரு ஒருபாகமாகப் பிரித்து இந்தக் கலவையைத் தடவி 15 நிமிடங்கள் ஊறவைக்கவும். ( எரிச்சல் கொடுக்கும்) பின் தரமான சிகைக்காய் அல்லது ஷம்பூ கொண்டு தலைமுடியைஅலசவும்.

- வேப்பிலைப் பொடி 5 டேபிள் ஸ்பூன்
- துளசிப் பொடி 5 டேபிள் ஸ்பூன்
- கென்னாபொடி 5 டேபிள் ஸ்பூன்.


எடுத்து பேஸ்ட் பதத்தில் கலந்து தலையில் தேய்க்கவும். சிறிது நேரம் கழித்துத் தலையை அலசவும். பொடுகு போக இதுவும் நல்ல தீர்வாகும்.

பிசுபிசுப்பான முடிக்கு என்ன தீர்வு என்பதை அடுத்த வார இதழில் கூறுகிறேன். **தொடரும்...**





# தென்னையுடன் கொடித்தோடை



ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி
உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263

**குடும்பம் :** பசிபுளோரேசி
கொடித்தோடை (Fassion Fruit)
**தாவரவியல் பெயர் :**
பசிஃபுளோராஎடியூலிஸ்.

கொடித்தோடை பிரதானமாகபழச்சாறு உற்பத்திக்கே பயன்படுத்தப்படுகின்றது. பழமாக உண்பது மிகவும் குறைவு. கொடித்தோடை இலைகள் இலைக்கறியாகச் சமைக்கலாம்.

**பொருத்தமானகாலநிலை:** ஈரவலயம் மிகவும் சிறந்தது. உலர், இடைவலயங்களில் செய்கை மேற்கொள்ளப்படும் போது வரட்சியானகாலங்களில் நீர்ப்பாசனம் செய்தல் வேண்டும்.

**மண்:** மணல் மண், இருவாட்டி மணல், களித்தன்மையான இருவாட்டிமண். மண்ணின், நீர்பெறுமானம் 67.5ஆக இருப்பது நல்லது.

**வர்க்கங்கள் :**

1) மஞ்சள் வர்க்கம்
2) ஊதாவர்க்கம்
3) கங்கலகலப்புவர்க்கம்.

இவ் வர்க்கங்களைத் தவிர இயற்கையாக கலப்படைந்த மென் சிவப்புநிறமான பழங்களைக் கொண்ட வர்க்கமும் ஒன்றுள்ளது.

**நடுகைப் பொருட்கள் :**

- விதைகளைமுளைக்கச் செய்யலாம்.
- தண்டு துண்டங்களை வேர்விடச் செய்யலாம்.
- ஒட்டுதல் மூலமும் கன்றுகளை உற்கத்தி செய்யலாம்.

ஒரு வருடத்தில் ஆகக் குறைந்தது 600 பழங்களைவிளைவாகத் தருகின்றகொடிகளில் இருந்து தண்டுத் துண்டங்களை அல்லது விதைகளைஎடுக்க வேண்டும்.

**விதைகளைச் சேகரித்தல் :** தெரிவுசெய்யப்பட்டகொடிகளில் இருந்து பழங்களை எடுத்து அவற்றைப் பிரித்து நடுப் பகுதியினைச் சுரண்டிஎடுக்கவும். சாற்றினை வேறாக்கிக் கொள்ளவும். அதன் பின்பு விதைகளைச் சாக்குத் துண்டொன்றில் பரவிநீரில் கழுவவும். 1/2kg உலர்ந்த விதைகளைப் பெறுவதற்கு 175 பழங்கள் தேவை.

- விதைகளைப் பிரித்து எடுத்தவுடன் நட வேண்டும். நடுவதற்குமுன்புவிதைகளின் வெளிப்புறத்தில் காணப் படுகின்ற தோலை கழுவி அகற்ற வேண்டும்.
- விதைகளை ஒரு நாள் நீரில் ஊறவைப்பதன் மூலம் அவற்றை விரைவில் முளைக்கச் செய்யலாம்.

**விதைகளைநடும் நாற்று மேடை:** மேல் மண், மணல் மண், கூட்டெருஎன்பவற்றைசமஅளவில் கலந்து அக்கலவை தயாரித்த பாத்திகள் மேல் 10-15cm உயரத்திற்கு தட்டு வடிவமாகப்பரவவும். இதன் பின்புநாற்று மேடைகளை கப்ரான் பங்கசு கொல்லியினால் பரிகரணம் செய்யவும். இதன் மூலம் நாற்றுஅழுகல் நோயினைத் தவிர்த்துக் கொள்ள முடியும். சிறியதடிஒன்றினால் நாற்று மேடைக்குக் குறுக்கே 5cm இடைவெளிகளில் ஆழமில்லாத பள்ளங்களை அமைத்து 1cm இடைவெளிகளில் விதைகளைப் போட்டுநாற்று மேடையை மண்ணால் மூடி விடவும். தினசரி நாற்று மேடைகளுக்கு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். மூன்றுவாரத்தில் விதைகள் முளைக்கும்.

இந் நாற்றுக்கள் 20-25cm உயரமாக வளர்ந்தவுடன், பிடுங்கி நேரடியாகத் தோட்டத்தினுள் நடலாம்.

**தோட்டத்தினைத் தயார் செய்தல்:** தென்னந்தோட்டங்களில் தென்னைகளுக்குநடுவே 2 மீற்றர் வரிசையில் நடலாம். இரு கொடித் தோடைக் கன்றுக்கு இடையிலுள்ள இடைவெளி 4 மீற்றர் ஆகும்.

**நடுகைக் குழிகள் :** 60cm அகலம், 60cm நீளம், 60cm ஆழம் கொண்டகுழிகளை வெட்ட வேண்டும். மேல் மண்ணுடன் நன்கு உக்கிய 2கூடை மாட்டெருவினாலர் கன்றுகளைநடுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு இக் குழியினைநிரப்ப வேண்டும்.

செப்ரெம்பர் ஒக்ரோபர் மாதங்களில் கன்றுகள் நடலாம்.

**ஆதாரமாகதடிகள் நடுதல்:** கன்றுகள் நட்டிருக்கும் வரிசைக்கு 30cm முன்பக்கமாக ஒவ்வொரு இரண்டு கொடித்தோடை கன்றுகளுக்கும் இடையில்,பலமானதடி ஒன்றினை ஆதாரமாக நட வேண்டும். கொடிகளைபடர விடுவதற்காக நில மட்டத்திலிருந்து 2மீற்றர் உயரத்தில் கம்பியினைக் கட்டலாம். இவை தடிகளுடன் இணைப்பதற்காக பயன்படுத்தப்படும். முள்ளுக் கம்பிகள் பயன்படுத்தினால் கொடிகளுக்குகாயம் ஏற்படும். நிலமட்டத்திலிருந்து கம்பியின் வழியே உயரத்திற்கு வளர்ந்த கொடியினை 15cm தூரத்திற்கு வளர்ந்தபின் அரும்பினைக் கிள்ளிவிடவும். இதனால் பக்ககிளைக் கொடிகள் வளர ஆரம்பிக்கும்.

**நீர்ப்பாசனம் செய்தல் :** வரண்டநேரத்தில் நீர்ப்பாசனம் செய்வதனால் கொடிகளில் தொடர்ச்சியாகப் பூக்கள் உருவாகும். இதனால் விளைவு அதிகரிக்கும். கொடியின் அடியிலிருந்து 45cm ஆரையாகவட்டப்பாத்தி அமைத்துஅதற்குள் நீர்ப்பாசனம் செய்யலாம். மேலும் ஈரத்தினைப் பாதுகாத்து வைப்பதற்கு வைக்கோல், வாழைச்சருகுகள் என்பவற்றினைப் பாத்திரக் கலவையாக இடலாம்.

பசளையிடுதல். உலர் வலயத்திற்குசிபார்சு செய்யப்பட்டபசளை (கிராம்களில்).

| பசளை இடும் காலம் | யூரியா | T.S.P | M.O.P |
|---|---|---|---|
| நாற்றுநடமுன்புமேல் மண்ணுடன் கலந்து விடுதல். | 70 | 105 | 55 |
| நட்டு இரண்டு மாதத்திற்குபின்பு (வளர்ச்சிகுறைவாக இருந்தால் மாத்திரம்). | 70 | 105 | 55 |
| நட்டு 6 மாதங்களின் பின்பு. | 70 | 105 | 55 |
| இரண்டாவதுவருடத்தில் (6 மாதங்களுக்குஒரு தடவை). | 140 | 210 | 110 |
| மூன்றாவதுவருடத்தில் (6 மாதங்களுக்கு ஒரு தடவை). | 210 | 315 | 165 |
| நான்காவதுவருடத்தில் (6 மாதங்களுக்கு ஒரு தடவை). | 280 | 420 | 220 |

கொடியின் அடியிலிருந்து 30 45cm தூரத்தில் வட்டமாகப் பசளையிட்டுமண்ணுடன் கலந்து விடவும்.

**பூச்சிபீடைகளைக் கட்டுப்படுத்தல்.**

1. ஏ பிட்டுக்கள்.

- மைகஸ் பர்சிகே.
- ஏபிஸ் ஸ்பைறகோலா.
- ஓபிஸ் கொசிபி.
- ஓபிஸ் குறுயிவோறா.

**2.கொடியினைவெட்டும் வண்டுகள் (ஸ்ரிதெனிசாகிறிசேடர்).**

**நோய்கள்**

- கொடித்தோடைவைரசு நோய்.
- வேர் அழுகல்.
- இலைப்புள்ளி நோய்.

சிபார்சு செய்யப்பட்ட பூச்சி நாசிகளையும், பங்கசுநாசினிகளையும் சிபார்சுசெய்யப்பட்ட அளவில் விசிறிகட்டுப்படுத்தலாம்.

பூக்களில் செயற்கையான மகரந்தந் சேர்க்கை.

முறையாகப் பராமரிக்கப்பட்ட கொடித் தோடைபயிரில் 46 மாதங்களில் க்கள் உண்டாகும். அதிககாய்களைஉருவாக்குவதற்கு இப் பூக்களில் செயற்கையாக மகரந்தச் சேர்க்கை செய்தல் மிக முக்கியமானது.

மதியம் 1.00 மணி முதல் மாலை 6.00 மணிவரையுமேயுள்ள காலப்பகுதியில் செயற்கையாக மகரந்தச் சேர்க்கை செய்ய முடியும்

பூக்களின் கேசரங்களின் மேற்புறத்தில் காணப்படும் மகரந்தமணிகளைமெல்லியநார் கொண்ட தூரிகையினால் அல்லது, ஆட்காட்டிவிரலினாலும் எடுத்து குறிகள் மீது தடவுவதன் மூலம் செயற்கையானமகரந்தச் சேர்க்கை அடையச் செய்யலாம். நல்ல அனுபவுமுள்ளஒருவரால் 2000-2500 பூக்களில் மகரந்தச் சேர்க்கை செய்ய முடியும்.

செயற்கையாகமகரந்தச் சேர்க்கை செய்த பின்புஆகக் குறைந்தது 2 மணி நேரத்திற்கு மழைபெய்யக் கூடாது.

**குறிப்பு :** செயற்கையாகமகரந்தச் சேர்க்கையடையச் செய்வதனால் வைரசுநோய்கள் பரவாது.

**கொடிகளைக் காலத்திற்குக் காலம் கத்தரிப்பு செய்ய வேண்டும்.**

**அறுவடை செய்தல்.**

- மஞ்சள் வர்க்கத்தில் பூக்கள் தோன்றி 70 நாட்களிலும், ஊதா வர்க்கத்தில் பூக்கள் தோன்றி 90 நாட்களிலும் பழங்களை அறுவடைசெய்யலாம். மார்ச் மாதம் முதல் ஓகஸ்ட் வரையான காலமே அறுவடைக்காலமாகும்.
- நன்குபழுத்தபழங்கள் தானாக வேவிழும்.. பழங்களின் நிற மாற்றத்திலிருந்து அறுவடை செய்வதற்கு பொருத்தமான பழங்களைத்தெரிவு செய்யலாம்.
- நன்குபராமரிக்கப்படுகின்றஒரு கெக்டர் விஸ்திரணத்தில் பயிரிடப்பட்டகொடித் தோடையிலிருந்து 5000மப அளவு விளைவினைப் பெறலாம்.
- கொடித்தோடைப் பயிரிலிருந்து 5 வருடகாலத்திற்கே இலாபம் தரக்கூடிய விளைவினைப் பெறலாம். ஆகக் கூடிய விளைவினை 3ம் வருடம் பெற முடியும்.






வவுனியா ஆசிக்குளம் கிராம அலுவலகர் பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களுக்கு வழங்கப்பட்ட நிதி தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் நகரபிதா மு.சந்திரகுலசிங்கம், எம்.தேவராசா, வடமாகாணசபை உறுப்பினர் நி.ஜி.லிங்கநாதனும் கலந்து கொண்டனர்.



# 2016 கலக்கப் போவது யாரு?

அன்ரூ இக்னேஷ்



கடந்த வருடத்தில் அடிமேல் அடி வாங்கினாலும், எல்லா வற்றிற்கும் வட்டிகுட்டியெல்லாம் சேர்த்து மூன்றாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்திற்கு சாத்துப்படி கொடுத்து 'இயர் என்ட் விக்ரறி'யுடன் கடந்த வருடத்தை இலங்கை கிரிக்கெட் அணி நிறைவு செய்துவிட்டது.


மூத்தவீரர்கள் வரிசையாக ஓய்வு பெற, இளம்வீரர்கள் இப்பொழுது தான் மெல்லமெல்ல காலூன்ற ஆரம்பித்துள்ளனர். ஆரம்பத்தில் தடுமாறினாலும் இப்பொழுதெல் லாம் அடிக்கடி மின்ன ஆரம்பிக் கிறார்கள். அணியை வெற்றிபெற வைக்குமளவு அவர்கள் இன்னும் எழுச்சிபெறவில்லைத்தான். ஆனால், அப்படியான மிரட்டல் நாயகர்களாக அவர்கள் விரைவில் உருவாகுவார்கள் என நம்பும் விதமாகவே ஆடத் தொடங்கியிருங் கிறார்கள். அப்படியான வீரர்களின் பட்டியலே இது.

இந்த வருடத்தில் இலங்கை கிரிக்கெட்டின் தவிர்க்க முடியாத வீரர்களாகஇருக்கக்கூடிய,சர்வதேச கிரிக்கெட்டில் மிரட்டுபவர்களாக மாறக்கூடிய வீரர்களின் பட்டியல் இது. டெஸ்ட், ஒருநாள், ஜி20 என சகல வடிவங்களிலும் 'கலக்கப் போவது யாரு' பட்டியல் இது.

### துஷ்மந்த சமீர

இன்றையதிகதியில் இலங்கை ரசிகர்களின் ஆஸ்தான் வேகப்பந்து வீச்சு புயல் சமீரதான். 'யோக்கர் கிங்' மலிங்கவையெல்லாம் ஐ.பி.எல் சீசனில்த்தான் நம்மவர்களிற்கு நினைவுக்கு வருகிறது. மலிங்கவின் வேகம், சமிந்தவாஸின் சாமர்த்தியம் இரண்டும் கலந்த கலவை சமீர. மலிங்கவின் ஆரம்பகாலத்தை விட, சமீரவின் ஆரம்பகாலம் கலக்கலாக உள்ளது.

இதுவரை ஆடியிருப்பது வெறும் 2 ஜி20, 4 டெஸ்ட், 8 ஒருநாள் போட்டிகள்தான். அதற்குள் இந்த 24 வயது புயலை உலக கிரிக்கெட் விமர்சகர்கள் அடையாளம் கண்டு விட்டனர். மணிக்கு 140 கிலோ மீற்றருக்கும் அதிக வேகத்தில் வீசும் இந்த 'புல்லட் போலர்' உலகின் அபாயகரமான பந்துவீச்சாளரா கலாமென பலரும் சொல்கிறார்கள். இதுவரை விளையாடிய குறைந்த போட்டிகளென்றாலும் சமீரவின் ஆட்டத்தை பார்த்தால் அப்படி தெரியவில்லையென்பது அவரது பெரிய பலம். வெளிநாட்டு ஆடுகளங்களென்றாலே ஆசிய பந்து வீச்சாளர்கள் பாடு திண்டாட்டத் தில்த்தான் முடியும். ஆனால் நடப்பு நியூசிலாந்து தொடரில் அந்த விதியை மாற்றி, கிடுகிடுக்க வைத்துள்ளார் சமீர. விரைவிலேயே மலிங்க இல்லாத குறையை சமீர நிவர்த்தி செய்வார் என நம்பலாம்.





### தினேஷ் சந்திமால்

இலங்கையின் இப்போதைய அதிகநம்பிக்கையான துடுப்பாட்ட வீரர்களிலொருவர் சந்திமால். கடந்த வருடங்களில் ஏற்ற இறக்கங் களுடன் இருந்த அவரது துடுப் பாட்ட கிராப், இப்பொழுது ஒரு சீருக்கு வந்துள்ளது. அதனால் நடு வரிசையில் பலம் சேர்க்கிறது சந்தி மாலின் துடுப்பு. கடந்த வருடத்தை போலவே, இந்த வருடமும் அணியின் முதுகெலும்பாக அவர் இருப்பாரென நம்பலாம்.

2014 இவருக்கு உச்சந்தலையில் சனி. ஆனால் கடந்த வருடத்தில் சனி தோஷம் விலகி அதிக டெஸ்ட் ஓட்டம் எடுத்த விக்கெட் கீப்பர் என்ற பெருமைக்கு சொந்தக் காரராகி விட்டார். தனிஆளாக போட்டியின் முடிவை மாற்றவல்ல வவர் என்பதை இந்தியாவுடனான முதலாவது டெஸ்டில் நிரூபித்து விட்டார்.

இந்த வருடமும் சந்திமாலின் துடுப்பு பேசினால் ரசிகர்களின் ஆரவார சத்தம் அரங்கை பிளக்கும்!

### மிலிந்த சிறிவர்த்தன

கடந்த இரண்டு வருடமாக திறமையான வீரர்களை தேடுகி றோம் என ஏராளம் வீரர்களை களமிறக்கி பார்த்த தேர்வாளர்கள் இவரை ஏன் கண்டுகொள்ளாமல் விட்டனர் என கேட்க வைத்துக் கொண்டிருக்கிறார் மிலிந்த சிறிவர்த்தன. சகலதுறை ஆட்டக் காரர். பின்வரிசையில் இறங்கி சிக்சராகவும், பவுண்டரியாகவும் அடித்தாடி ஸ்கோரை உயர்த்த வேண்டுமா?, களத்தில் நங்கூரமிட்டு விட்ட எதிரணி துடுப்பாட்டக் காரர்களை பெயர்க்க வேண்டுமா?. கூப்பிடுங்கள் சிறிவர்த்தனவை. 4 டெஸ்ட், 4 ஜி20, 12 ஒருநாள் ஆட்டங்கள் மட்டுமே ஆடியுள்ள இந்த 30 வயது வீரர் அப்படியொரு நிலைமையை ஏற்படுத்தி விட்டார். ஒருநாள் போட்டிகளில் 108.05 என்ற ஸ்ரைக்ட் ரேட் வைத்திருந்து எதிரணி பந்துவீச்சாளர்களை மிரட்டுகிறார்.

தென்னாபிரிக்காவின் குளூஸ் னர் மாதிரி, அவுஸ்திரேலியாவின் அன்ரூ சைமன்ஸ் மாதிரி நமது சிறிவர்த்தனவும் சகலதுறைகளி லும் கலக்கும் வீரராக எழுச்சிபெறு வாரரென நம்பலாம். லேட்டாக வந்தாலும் லேட்டஸ்ட்டாக வந்த மிலிந்த!

### டனுஷ்க குணதிலக

ஜெயசூர்யா போய்விட்டார். 'குட்டி ஜெயசூர்யா' என்ற பெய ரெடுத்த குசல் ஜனித் பெரோவும் தடைவாங்கிக் கொண்டு வீட்டில் உட்கார்ந்திருக்கிறார். ஏற்கனவே அல்லாடிக்கொண்டிருக்கிற இலங்கை இனி அம்பேல் என நினைத்தவர்களிற்கு தனது துடுப் பால் பதில் சொல்ல ஆரம்பித் துள்ளார் டனுஷ்க. இலங்கையின் இன்னொரு இடதுகை 'அபாயம்' டனுஷ்க என்கிறார்கள் விமர் சகர்கள். நியூசிலாந்து தொடரில் அவரது ஆட்டத்தை பார்த்தவர்கள் அதை அடித்து சொல்கிறார்கள்.

நியூசிலாந்துடனான மூன்றாவது போட்டியில் 'பற்ற' வைத்தவர் அவர்தான். 277 என்றமெகாஇலக்கை சேஸ் செய்ய தொடங்கியபோது, அனல்பறக்கும் ஆரம்பத்தை தனுஷ்கதான் தொடக்கியது. அது தான் வெற்றியின் அடித்தளம். நியூசிலாந்து வேகங்களை உண்டு இல்லையென ஆக்கினார். அவர் தான் போட்டியின் நாயகன்.

இதுவரை ஆடியிருப்பது வெறும் 5 ஒருநாள் போட்டிதான். அதிலேயே முத்திரையை பதித்து விட்டார். டனுஷ்க இந்த வருடத்தின் டான் ஆக இருப்பார்.

> **மலிங்கவின் வேகம், சமிந்தவாஸின் சாமர்த்தியம் இரண்டும் கலந்த கலவை சமீர. மலிங்கவின் ஆரம்பகாலத்தை விட, சமீரவின் ஆரம்பகாலம் கலக்கலாக உள்ளது.**

---





வாழைச்சேனை பிரதேச செயலர் பிரிவில் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களை சேர்ந்த 10 பேருக்கு சுயதொழில் முயற்சிக்கான உதவிகள் வழங்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான சுயதொழில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.



கணபதிப்பிள்ளை அசோகன்
Asokan 2301@gmail.com




# வடமுனைவுப் பிரதேசத்தில் எமது வலசைப் பறவைகள்

இந்தத்தொடரில் இதுவரை வலசைப்பறவைகள் பற்றிய பொதுவான அறிமுகம் மற்றும் பண்டைய இலக்கியங்களில் வலசைப்பறவைகள் என்ற விடயம் எவ்வாறு பார்க்கப்பட்டது என்பன பற்றி ஆராய்ந்தோம்.

குளிர் காலத்தில் இங்கு எமது வடபகுதிக்குவந்து போகும்வலசைப் பறவைகள் தமது தாய்ப்பிரதேசத்தில் (ஏன் தாய்ப்பிரதேசம் என்ற சொல்லை பாவிக்கின்றோம் எனில் அங்கு தான் அவற்றின் இனப் பெருக்க செயற்பாடு நிகழ்கின்றது) கோடை காலத்தில் என்ன செய்கின்றன, கோடை காலம் முடிய அவைகள் இங்கு வருகின்றன, அவற்றை அங்கிருந்து வெளியேற்ற தூண்டும் காரணிகள் என்ன என்பதைபற்றிஇந்தஅத்தியாயத்தில் விளக்கமாக ஆராய்வோம்.

### வடமுனைவில் வலசைப்பறவைகள்

வலசைப்பறவைகள் தமது வருடாந்த வாழ்க்கை வட்டத்தில் ஆறுமாதம் தமது தாய் பூமியாகிய (இனப்பெருக்க செயற்பாடு நிகழும் பிரதேசம்) வடமுனைவுக்கு அண்மையிலும் மிகுதி ஆறு மாதத்தை தமது குளிர்கால உணவு தேடும் பிரதேசமாகிய மத்திய கோட்டுக்கு அண்மைய அல்லது சில வேளைகளில் தென்னரைக்கோல நாடுகளில் கழிக்கின்றன.

இவை வடமுனைவிற்கு கிட்ட உள்ள பிரதேசங்களில் இருக்கும் காலமே அவற்றின் இனப்பெருக்க காலமாகும். இது மே அல்லது ஜூன் இல் இருந்து ஓகஸ்ட், செப்ரம்பர் வரை நீடிக்கும்.

இந்தப்பிரதேசங்களில் இவற்றின் வாழிடங்களில் இனப்பெருக்கத் துடன்தொடர்புடைய கூடுகளுடன் அவற்றைக் காணலாம். பலஆயிரக் கணக்கான வலசைப்பறவைகள் அநேகமாகஒரே இடத்தில்கூடுகளை கட்டி வாழ்வது கண்ணுக்கு மிகவும் ரசனையை தரும் காட்சியாகும். இந்தக்கட்டுரையில் அவ்வாறான ஒரு படம் தரப்பட்டுள்ளது.

இந்த இனப்பெருக்க பிரதேசத்தில் இனப்பெருக்க காலத்தில் இனப் பெருக்கத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளான காதலாடல், புணர்ச்சி, அடைகாத்தல், குஞ்சுகள் பராமரிப்பு மற்றும் குஞ்சுகளுக்கு உணவுவழங்கல் ஆகிய நடைபெறுவனூடாக அந்த ஆண்டுக்குரிய இனப் பெருக்க வட்டம் பூர்த்தியடைகின்றன. இந்த செயற்பாடுகளை நீங்கள் Discovery animal planet மற்றும் national discovery போன்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கண்டிருக்கலாம்.

### வடமுனைவு வாழிடத்திலிருந்து குடிபெயர்தல்

இனப்பெருக்க செயற்பாடு வெற்றிகரமாக வடமுனைவு வாழிடத்தில் நடைபெறுகின்றன என்றால் இந்தப்பறவைகள் அங்கிருந்து குடிபெயர வேண்டிய அவசியம்தான் என்ன? விஞ்ஞான ரீதியாக இந்தக்காரணங்கள் விளக்கப்பட்டுள்ளன. வடமுனைவுக்கு அண்மையில் கோடை காலத்தில் மிகக்கூடியளவில் பகல் காலம் (ஒளிக்காலம்) கிடைக்கின்றது. உலகளவில் பலர் நோர்வே மற்றும் வடகனடா போன்றபிரதேசங்களில் 18 மணித்தியாலத்திற்கு மேல் சூரியஒளி (பகல்காலம்) காணப் படுவதனை கண்டிருப்பீர்கள் அல்லது கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தக்கூடிய நேர ஒளி பறவைகளின் நாளாந்த செயற்பாடான உணவு தேடுதல், இளசுகளைப் பராமரித்தல் போன்றவற்றை சிறப்பாகவும், வினைத்திறனாகவும் செய்ய மிகவும் உதவியாக இருக்கின்றது. தாவரங்களுக்கும் அதிகளவு நேரம் சூரியஒளி கிடைப்பதனால் தாவரத்தின் உணவு உற்பத்தி மிக அதிகமாக இருக்கும். இந்த உணவு நேரடியாகவோ அல்லது உணவுச்சங்கிலியூடாக பறவைகளுக்கு போதியளவு கிடைக்கின்றது. ஆனால் வட முனைவுப் பிதேசத்தில் இடஅமைவு காரணமாக இந்த ஒளி கிடைப்பதில்லை. மாரிகாலம் தொடங்க (செப்ரம்பர் அல்லது ஒக்ரோபர்) இங்கு சூரியஒளியின் காலஅளவு மிகக்குறைவடையும். சிலவேளை ஒரு நாளில் ஆறுமணித்தியாளங்கள் கூட சூரியஒளி காணப்படாது

இந்த நிலை வரும்போது தாவரங்களுக்கு ஒளி கிடைக்குமளவு குறைவடையும் போது அவற்றின் ஒளித்தொகுப்பால் உற்பத்தியாக்கப் படும் உணவின் அளவு மிகக்குறைவாக இருக்கும். எனவே சூழலில் கிடைக்கும்உணவிற்குகடும்போட்டி நிகழும். அத்துடன் பறவைகள் பகலில் அலைந்து திரிந்து உணவு தேடக்கிடைக்கும் நேரமும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

இந்த சூழல் பலமில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் கூர்ப்பின் விளைவாக குடிப்பெயர்வு என்ற தோற்றப்பாடு உருவாகியது. அது மில்லியன் கணக்கான ஆண்டுகளாக இன்னும் தொடர்கின்றது. இங்கு சாராம்சம் என்னவெனில் துருவப் பகுதியில் பகல் காலம் (சூரியஒளி கிடைக்கும் நேரம்) ஒரு குறிப்பிட்ட மணித்தியாலங்களை விட குறையும் போது குடிபெயர் பறவைகள் தமது வடதுருவ வாழிடங்களை விட்டு மத்தியகோடு மற்றும் தென்னரைக் கோலத்தினை நோக்கி குடிபெயர் பறத்தலை தொடங்குகின்றன. இதற்கு அவைகாட்டும் தோற்றப் பாடு குடிபெயர் அமைதியின்மை என்பதாகும.

### குடிபெயர் அமைதியின்மை

வடதுருவப்பிரதேசங்களில் குடி பெயர் பறவைகளை பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்களும், பறவையியலாளர்களும் ஒவ்வொரு முறையும் அந்தப்பறவைகள் தமது வடஅரைக்கோலத்திற்கான குடி பெயர்பறத்தலைதொடங்கமுன்னர் தமது உடற்தொழிலியலில் ஒரு அமையின்மையை காட்டுகின்றன.


இது அந்தப்பிரதேசத்தின் பகல் ஒளிக்காலத்துடன் நேரடியாக தொடர்புபட்டிருந்தமையும் அவர்கள் அவதானித்தனர். இதனை ஆய்வுகூடத்தில் பரிசோதனை ரீதியாக வாய்ப்பு பார்க்கும் பரிசோதனையில் தங்களது எடுகோல் சரியென்று அவர்கள் நிரூபித்தனர்.


ஆய்வுகூடத்தில் குடிபெயர் பறவைகள் சிலவற்றினை கூட்டில் வளர்த்தார்கள். அந்தக்காட்டிற்கு கிடைக்கும் ஒளியை கட்டுப்படுத்தக் கூடிய ஒரு ஒழுங்கமைப்பினை அவர்கள் செய்திருந்தனர். இரத்தப் பரிசோதனையில் பறவைகளுக்கு கிடைக்கக்கூடிய ஒளிக்காலம் சிறிது சிறிதாக குறைந்து கொண்டு வந்தபோது ஒரு குறித்த ஒளிஅளவை விட குறைந்த காலத்திற்கு ஒளி கிடைக்கும் வேளை பறவைகள் ஒரு அமைதியற்ற செயற்பாடுடன் கூடிய நடத்தையை காட்டின. அந்தக்கட்டத்தில் பறவைகளை திறந்து விட அவை ஓடிக்காணாமல் போயின. அந்த ஆய்வுகூட சோதனைக்கான படம் இங்கு தரப்பட்டுள்ளன. இங்குகருதப்படவேண்டிய மிகமுக்கியமான விடயம் என்னவெனில், அமெரிக்க கண்டத்தில் (புதிய உலகத்தில்) நடைபெறும் பறவைகளில் குடிபெயர்வு பற்றியும் அவற்றின் வெவ்வேறு அம்சங்கள் பற்றியும் அநேகமாக தேவையான அளவு விபரங்கள் பெறப்பட்டு விட்டன. எமது ஆசிய குடிபெயர் பறவைகளைப்பற்றியும் அவற்றுடன் தொடர்புடைய வட அரைக்கோலத்தின் போதிய ஆய்வுகள் செய்யப்பட்டு விட்டன. ஆனால் இங்கு இலங்கையில் (குறிப்பாக வடபகுதியில்) இந்தப் பறவைகள் மீண்டும் திரும்பி தமது இனப்பெருக்க தாய்ப்பிரதேசத்திற்கு போவதற்கான தூண்டுதல் எவ்வாறு கிடைக்கின்றன. என்று இதுவரை ஆதார பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை.

> **ஆய்வுகூடத்தில் குடிபெயர் பறவைகள் சிலவற்றினை கூட்டில் வளர்த்தார்கள். அந்தக்காட்டிற்கு கிடைக்கும் ஒளியை கட்டுப்படுத்தக் கூடிய ஒரு ஒழுங்கமைப்பினை அவர்கள் செய்திருந்தனர்.**

இதற்கு நான் முன்னரே கூறிய முப்பது வருட யுத்தமும் அதனுடன் தொடர்புடைய பாதுகாப்புக் கெடுபிடிகளும் காரணமாகும். இங்கு இலங்கையில் வடபுலத்தில் வந்து போகும் இந்த குடிபெயர் பறவைகள் சம்பந்தமான ஆய்வுகளை குடிமக்கள் தொடர்புடைய விஞ்ஞானம் என்ற அடிப்படையில் நாம் செய்து அதனால் புதிய புதிய விடயங்கள் கண்டுபிடிக்கப் படுமாயின் எமது உள்நாட்டு மக்கள் சர்வதேச அளவில் பிரபலம் பெறுவர்.

அத்துடன் இந்தத்தரவுகள் வட பகுதியில் குடிபெயர்ப்பறவைகள் வந்து போகும் வாழிடங்களைப் பற்றிய விஞ்ஞான பூர்வமான அறிவை மேம்படுத்துவதுடன் உலகலாவிய வலைப்பின்னலாக நடைபெறும் குடிபெயர்ப் பறவைகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களை பாதுகாத்தல் என்ற செயற்பாட்டில் நாமும் இணைந்தவர் எனலாம். குடிபெயர் பறவைகள் குறித்த பாதையால் எவ்வாறு வந்து போகின்றன என்று அடுத்த வாரம் பார்ப்போம். **தொடரும்...**







## நாலுகால் கோழிக்குஞ்சு


டிக்கோயா பெரியகந்தகலையில் இந்த ஆச்சரிய கோழிக்குஞ்சு பொரித்துள்ளது. கடந்த புதுவருட தினத்திலன்று பொரித்த இந்த கோழிக்குஞ்சிற்கு நான்கு கால்கள் உள்ளன. இரண்டு கால்கள் நடக்க பயன்படும் அதே சமயத்தில், பின்பக்கமாக சிறியஅளவில் இரண்டு கால்களும் உள்ளன.



## அப்பவே அப்பிடி

செல்பேசிகள் 1976 இல்த்தான் முதலில் அறிமுகமானது. இப்பொழுது புதிய தகவலொன்று கிளம்பி பரபரப்பை கிளப்பியுள்ளது. 800 வருடங்களின் முன்னரே செல்பேசி பழக்கத்தில் இருந்ததென்றும், ஒஸ்திரியாவில் அப்படியொன்று கண்டுபிடிக்கப்பட்டதென்றும் செய்தி பரவியுள்ளது. களிமண்ணால் செய்யப்பட்ட இதில், நவீன செல்பேசி போன்ற அத்தனை அம்சமும் உள்ளதாம். இதற்குள் வேற்றுகிரகவாசிகள் வந்தபோது கைவிட்டு சென்றதாக இருக்கலாமென்றும் யாரே கிளப்பிவிட்டுள்ளனர்.

ar_atiki Happy New Year My dear Dubai. May God bless you and keep you safe, you always surprise us with the biggest fireworks.



mirza_reza_ Most inappropriate selfie ever.



## தீயாய் 'செல்பி'

டுபாயில் புத்தாண்டு தினத்திலன்று நட்சத்திர விடுதியொன்றில் தீவிபத்து ஏற்பட்டது. 60 மாடி கட்டிடமான இந்த விடுதியின் தீவிபத்து உலகத்தின் முக்கிய செய்தியாக இடம்பிடித்தது. அதையெல்லாம் விட பெரிய சர்ச்சையாக உருவெடுத்துள்ளது, அந்த தீவிபத்தின் போது, அருகிலுள்ள கட்டிடமொன்றில் நின்ற தம்பதியொன்று சிரித்தபடி 'செல்பி' எடுத்து வெளியிட, அது இப்பொழுது சர்ச்சையாகியுள்ளது.



## இது புதுசு!

உலகெங்கும் 2.3 பில்லியன் மக்கள் பாதுகாப்பான கழிப்பறையில்லாமல் திண்டாடுகிறார்கள். இவர்களிற்காகவே உருவாக்கப்பட்டது இந்த கழிப்பறை. Nano Membrane Toilet என்ற இதற்கு தண்ணீர் தேவையில்லை. கழிவுகளை சக்தி பிறப்பிக்கும் மூலமாகவும் மாற்றும் வல்லமை இதற்குள்ளது. பிரித்தானியாவில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.





## காலடியில் மின்வயர்

மட்டக்களப்பின் தாந்தாமலை கிராமத்தில் இந்த அதிர்ச்சிகாட்சி படம்பிடிக்கப்பட்டுள்ளது. காணியொன்றின் வேலியுடன் மின்சார வயர் இணைக்கப்பட்டுள்ளது. நிலத்திலிருந்து மூன்றடி உயரத்தில் மின்சார இணைப்பு வயர் உள்ளது. அந்தப்பகுதியில் விளையாடும் சிறுவர்கள், கால்நடைகளின் நிலையை எண்ணி கதிகலங்கிப் போயுள்ளனர் மக்கள்.

## சுருட்டலாம் வாங்க!

எல்.ஜி நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய தொலைக்காட்சி இது. இதனை பத்திரிகையை போல சுருட்டிக் கொண்டு செல்லலாம். எல்.ஈ.டி தொழில்நுட்பத்தின் அடுத்தகட்டமான ஓ.எல்.ஈ.டி டிஸ்பிளே வசதியை கொண்டது. 18 இன்ஞ் அகலமுடையது. இதுதவிர, 56 இன்ஞ் அகலத்தில் சுருட்ட முடிவதுடன், முன்பின்னாகவும் பார்க்கும் வசதி கொண்ட தொலைக்காட்சியொன்றையும் விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளனராம்.





## சிங்க லே

சிங்க லே விவகாரம் சூடு பிடித்துள்ளது. இந்த விவகாரத்தை இனவாதிகள் கையிலெடுத்துள்ளதாக கூறப்பட்டு வரும் நிலையில், முஸ்லீம்களின் வீடுகளிலும் இதனை குழுவொன்று எழுதிவருகிறது. இதேவேளை, தாம் இனப்பற்றுடன் செயற்பட்டு வருவதாக கூறும் ஒரு குழு பொது இடங்களிலும் இதனை எழுதி வருகிறது.

வடக்கின் கட்டடக்கலையில் பாரிய புரட்சியை ஏற்படுத்தி கொண்டிருக்கும்...




We Are... Strong | Quick | Probity | Quality | Style | Sincerity | Humble | Smart Architecture

We Provide
Apartment Building | Modern House | Schools | Multi Complex | Office Building | Hotel & Restaurant | Wedding Hall

Contact Us: UK - 0044 2037692286 SWISS - 0041 315087079 GERmany - 0049 32214219745

Malaisanthi, Alvai Road, Alvai, Jaffna. | Tel : +94 (021) 2261400
Web : www.harienginering.com

வர்ணம்
பதிப்பகம்

Varnam
PRINTERS

#186A, Kurumankadu Junction, Vavuniya.
Call : 077 0707736
varnamvavuniya@gmail.com

சகல விதமான அச்சுப்பதிப்பு வேலைகளும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
All type of printing Works

தீபன் அச்சகம்
இல.18, யாழ் வீதி (இலுப்பையடி),
வவுனியா.
திருமண அழைப்பிதழ்களின் சிறந்த தெரிவுகளுக்கு.



Theepan
PRINTERS
No.18, Jaffna Road, Vavuniya.
024 2226466 / 077 0707736 / 077 6188830
theepanprinters@gmail.com

இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 10.01.2016 அன்று வெளியிடப்பட்டது